# ප්‍රගතිය
# முன்னேற்றம
# Progress
# 2010



ජාතික උරුමයන් හා සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය
கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு
Ministry of National Heritage and Cultural Affairs

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு

# முன்னேற்றம் - 2010

கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமை அமைச்சினால் 2010ஆம் வருடத்தில் செய்யப்பட்ட வேலைகள் மற்றும் முன்னேற்றம் 2011 ஆம் வருடத்தில் நடைமுறைப்படுத்த தீர்மானித்த வேலைத்திட்டங்கள் சம்பந்தமாக அறிமுகப்படுத்துவதற்காக அமைச்சின் செயற்திட்டப் பிரிவினால் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.


வெளியீடு
கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு
8வது மாடி
செத்சிறிபாய
பத்தரமுல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| நிறுவனங்கள் | பக்க எண் |
|---|---|
| 1. கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு - | 01 - 19 |
| 2. கலாசார திணைக்களம் | 20 - 32 |
| 3. தொல்பொருள் திணைக்களம் | 33 - 41 |
| 4. தேசிய நூதனசாலை திணைக்களம் | 42 - 51 |
| 5. தேசிய சுவடிக்கூடத் திணைக்களம் | 52 - 62 |
| 6. மத்திய கலாசார நிதியம் | 63 - 71 |
| 7. டவர் மண்டப அரங்க நிதித் தாபனம் | 72 - 75 |
| 8. பொது அரங்காற்றல் சபை | 76 - 79 |
| 9. காலி உரிமை மன்றம் | 80 - 86 |
| 10. ஜனகலா நிலையம | 87 - 89 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.0 தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

**நோக்கு**

பெருமிதமிக்க தேசிய மரபுரிமைகளினால் கட்டி வளர்க்கப்பட்ட இலங்கை பிரசையானவன் தனது அபிவிருத்தியின் உயிர்நாடியான கலாசார அடையாளத்தைப் பாதுகாத்தும், புதிய போக்குகளுடன் ஒத்துவரத்தக்கதாகவும் உலகின் ஏனைய நாடுகளுடன் நட்புறவுடனும் ஒற்றுமையுடனும் பலம் பொருந்திய நாடெனும் வகையில் முன்னேறிச் செல்லல்.

**பணி**

இலங்கையின் தேசிய மரபுரிமையை பாதுகாத்தல், பேணுதல், மேம்படுத்தல் மற்றும் பிரச்சாரம் செய்தல் மூலமாகக் கிடைக்கின்ற கலாசார அடையாளத்தை அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுகின்ற உந்து சக்தியாக நெறிப்படுத்தி இலங்கையை பெருமிதமிக்க இனத்தைக் கொண்ட அபிவிருத்தி அடைந்த நாடாகப் பேணிவர உதவுவதாகும்.

**குறிக்கோள்கள்**

நாட்டின் கலாசாரமானது அந்நாட்டு மக்களை வளம்படுத்துவதற்காக அறிமுகம் செய்யப்படுகின்ற சகல நிகழ்ச்சித்திட்டங்களையும் பயனுறுதிமிக்கதாக வெற்றியீட்டச் செய்ய ஏதுவாக அமையத்தக்கதாக மக்களின் நடத்தைகளை நெறிப்படுத்துகின்ற பிரதானமான கருவியெனக் கருதி குறிக்கோள்கள் இனங்காணப்பட்டுள்ளன.

- நாட்டின் பொதுத் தேசிய அபிவிருத்தி கொள்கையை வெற்றியீட்டச் செய்யக் கூடிய வகையில் மக்களை சுயமாகவே நெறிப்படுத்தவல்ல சாதகமான கலாசார சூழலொன்றை நாட்டில் உருவாக்குதல்.

- இலங்கையின் பல்லினத்தன்மையை ஏற்றுக்கொண்டு, அத்தகைய ஒவ்வோர் உப கலாசாரங்களினதும் அடையாளத்தைப் பாதுகாக்கின்ற அதேவேளையில் உப கலாசாரங்க அனைத்தையும் ஒன்றிணைத்து, இலங்கையர் எனும் பாரிய கலாசாரத்தை கொண்ட நாடாக முன்னேற்றிச் செல்லலும், பல்வேறு சக்திகளின் ஊடாகப் பாதிப்படைகின்ற சாதகமான கலாசார அம்சங்களை அத்தகைய பாதிப்புக்களிலிருந்து தடுத்தலும்.

- கலாசார மரபுரிமைகளை பேணுதல், முன்னெடுத்துச் செல்லல் மற்றும் பயன்படுத்தல் மூலமாக நாட்டு மக்களின் வாழ்க்கையின் கலாசார ரீதியான வடிவத்தை அமைத்துக் கொள்ள வழிசமைத்தல்.

- சாதகமான கலாசார அம்சங்களை இனங்காணவும் அவற்றை வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்ளவும் மக்களைத் தூண்டுதலும் அதனூடாக இலங்கையர் எனும் அடையாளங் கொண்ட கலாசாரத்தைக் கட்டியெழுப்புதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சின் கீழ் செயற்படுகின்ற பிரிவுகளும் நிறுவனங்களும்

**திணைக்களங்கள்**

- கலசார அலுவல்கள் திணைக்களம்
- தொல்பொருளியல் திணைக்களம்
- தேசிய நூதனசாலைகள் திணைக்களம்
- தேசிய ஆவணவாக்கல் திணைக்களம்

**நியதிச்சட்ட சபைகள்**

- மத்திய கலாசார நிதியம்
- டவர் மண்டப அரங்காற்றல் மன்றம்
- பகிரங்க அரங்காட்டுகைச் சபை
- காலி மரபுரிமை மன்றம்
- கலைக் கழகம்
- மக்கள் கலை நிலையம்

### 1.1 நிதி ஒதுக்கீடு - 2010, நிதிசார் முன்னேற்றம் - 2010.09.30 வரை


**அங்கீகரிக்கப்பட்ட, தற்போதுள்ள ஆளணி - 2010**

| | நிகழ்ச்சித்திட்டம் | 2010 ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.மி | 2010.09.30 இற்கான நிதிசார் முன்னேற்றம் |
|---|---|---|---|
| மீண்டெழுபவை | அமைச்சர் அலுவலகம் | 31.228 | 21.114 |
| | பொது நிருவாகம | 122.455 | 83.959 |
| | சமூக, கலாசார ஒருங்கிணைப்பு மற்றும் கலாசார மேம்பாடு | 364.342 | 317.500 |
| | **மொத்தம்** | **518.025** | **422.573** |
| மூலதனம் | அமைச்சர் அலுவலகம் | 3.800 | 2.730 |
| | பொது நிருவாகம் | 4.395 | 2.946 |
| | சமூக, கலாசார ஒருங்கிணைப்பு மற்றும் கலாசார மேம்பாடு | 520.965 ★ | 156.068 |
| | அமைச்சர் அலுவலகம் | 529.16 | 161.744 |
| | மொத்தம் | 1047.185 | 584.317 |

**★சீன அரசின் நிதிஉதவியுடன், கொழும்பு நொமான்ஸ் மைதானத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற தேசிய அவைக்காற்றல் திரையரங்க நிர்மாணிப்பு வேலைகளுக்காக சீன அரசினால் வழங்கப்படுகின்ற வெளிநாட்டு நிதியுதவி இவ் இடத்தில் குறிப்பிடப்படவில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




| | | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி |
|---|---|---|---|
| பதவிநிலை | - | 28 | 28 |
| பதவிநிலைசாராத | - | 474 | 459 |
| கனிஷ்ட | - | 406 | 532 |

## 1.2 செயற்பாடுகள் - 2010

### 1.2.1. கலாசார மேம்பாட்டு மற்றும் நிர்மாணப் பிரிவு

**முக்கிய செயற்பாடுகள்**

- பிரதேச மட்டத்தில் கலாசார நிலையங்களை தாபித்தலும் அவற்றை பராமரித்தலும் அதன்மூலம் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதலும்.
- பல்வேறு கலாசார சேவைகளை வழங்குதல்
- ஒழுக்கம் நிறைந்த சமுதாயமொன்றை கட்டியெழுப்புதல்
- தேசிய பாரம்பரியங்களை பாதுகாத்தல்
- கலாசார சங்கங்களை தாபித்தல்

#### 1.2.1.1. கலாசார நிலைய நிகழ்ச்சித்திட்டங்கள்

இதன்கீழ் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஒரு கலாசார நிலையம் என்ற அடிப்படையில் தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**நோக்கங்கள்**

- ஒழுக்கம் நிறைந்த சமுதாயமொன்றை கட்டியெழுப்புதல்
- பிரதேச சிறுவர், சிறுமியர்களிடத்தில் கலைசார் ஆற்றல்களை விருத்தி செய்தல்
- வெளிநாட்டு ஆடல் கலை அனுபவத்தை பெற்றுக்கொடுத்து அவர்களை சர்வதேச தரத்திற்கு கொண்டுவருதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I. புதிய கலாசார நிலையங்களை நிர்மாணித்தல்

| மாகாணம் | மாவட்டம் | பி.செ.பிரிவு |
|---|---|---|
| **2010 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்ட கலாசார நிலையங்கள்** | | |
| தென் | மாத்தறை | பிடபெத்தர |
| | | வெலிகம |
| | | |
| **2010 நாலாவது காலாண்டில் திறப்பதற்கு உத்தேசித்துள்ள கலாசார நிலையங்கள்** | | |
| தென் | அம்பாந்தோட்டை | பெலியத்த |
| வடமேல் | குருநாகல் | பண்டுவஸ்நுவர |
| | | |
| **2010 நாலாவது காலாண்டில் திறப்பதற்கு உத்தேசித்துள்ள கலாசார நிலையங்கள்** | | |
| சபரகமுவ | இரத்தினபுரி | இரத்தினபுரி |
| | | இபுல்பே |
| | | வெலிகேபொல |
| | | கஹவத்தை |
| | | கொலொன்ன |
| | | கொகவெல |
| தென் | காலி | வெளிவிடிய திவ்குர |
| | | கரன்தெனிய |
| | | |
| **2011 ஆம் ஆண்டில் பணிகள் பூர்த்திசெய்யப்படவுள்ள கலாசார நிலையங்கள** | | |
| வடமத்திய | அனுராதபுரம் | பலாகல |
| | | இபலோகம |
| | | கல்நேவ |
| | | தம்புத்தேகம |
| | | கி. நுவரகம்பலாத |
| மேற்கு | களுத்துறை | தொடங்கொட |
| | | இங்கிரிய |
| வடமேற்கு | குருநாகல் | உடுபத்தாவ |
| | | கொபைகனே |
| | புத்தளம் | மகுகொகுபுக்கடவல |
| | | பல்லம |
| சபரகமுவ | கேகாலை | வரகாபொல |
| ஊவா | பதுளை | சொரனதொட |

II. கலாசார நிலையங்களில் இலவச பயிற்சியை வழங்குகின்ற அழகியற்கலைகளும் ஏனைய பாடநெறிகளும்




- மேல்நாட்டு நடனம்
- கீழ்நாட்டு நடனம்
- சபரகமுவ நடனம்
- மக்கள் நடனம்
- நிபுணத்துவ நடனம்
- முரசு கொட்டுதல்
- மேலைத்தேய சங்கீதம்
- கீழைத்தேய சங்கீதம்
- நடனம், ஆடல் கலை
- ஓவியம் மற்றும் நிற்பம்
- முன்பாடசாலை
- உடல், உளவியல் வளர்ச்சி
- கைப்பணி
- சிங்கள மொழி
- தமிழ் மொழி
- பாலி, சமஸ்கிருத மொழிகள்
- ஆங்கில மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆம் ஆண்டளவில் கலாசார நிலையங்களினால் பயிற்சி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை 50,000 ஐ விட அதிகமாகும். 2010 செப்தெம்பர் 30 அளவில் நடளாவிய ரீதியில் அமைந்திருந்த கலாசார நிலையங்களின் எண்ணிக்கை 155 ஆகும்.

**III.** பிரதேச செயலக மட்டத்தில் கலாசார நிலையங்கள் கருத்திட்டம் ஐ




**IV.** கிராமிய சங்கங்களை தாபித்தல்

கலாசார மத்திய நிலையங்களினால் வழங்கப்படுகின்ற சேவைகளை மேலும் விஸ்தரிக்கும் நோக்கில் அந்த நிலையங்களுக்கு வருவதற்கான போக்குவரத்து வசதி குறைந்த கிராம மக்களுக்கும் அந்த சேவைகளை பெற்றுக்கொடுப்பதற்காக கலாசார நிலையங்களோடு ஒருங்கிணைந்த கிராமிய சங்கங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. அந்த கிராமிய சங்கங்களின் எண்ணிக்கை 2010 அளவில் 400 ஆகும்.

**V.** கலாசார நிலையங்களினால் தமது பிரதேச மக்களின் நலனோம்புகைக்காக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

**தேசிய நிகழ்ச்சித் திட்டங்கள்**

- தேசிய சுதந்திர வைபவம்
- புத்தாண்டு வைபவம் /உறவினர் வீடு செல்லல/தலைக்கு எண்ணெய் வைத்தல்
- "உள ஒளி பெறும்" வெசக் பக்தி கீதங்கள் நிகழ்சசித்திட்டங்கள்
- தேசிய இலக்கிய கலை வைபவம்
- "செனஹெச" களியாட்ட வைபவம்
- உலக சிறுவர் தினம்
- "கெதக வருண" நிகழ்ச்சி
- "யௌவனோதய" நிகழ்ச்சி
- " கிழக்கின் உதயம்" நிகழ்ச்சி
- கலாசார முகாம்கள்
- தேசிய விளையாட்டு வைபவம்
- போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சி
- "பிரதீபாலோக" தியான நிகழ்ச்சி

**பிரதேச மட்ட கலாசார நிகழ்ச்சிகள்**

- நாட்டார் பாடல் நிகழ்ச்சித்திட்டம்
- இலக்கிய வைபவம்
- கலாசார கண்காட்சி
- பால் பொங்கல் வைபவம்
- கிஸ்வெஸ் வைபவம்
- பண்டிகை விழா
- நடனம் மற்றும் வீதி நடனம்
- பல்வேறு அரச கலாசார வைபவங்களும் கலை நிகழ்ச்சிகளும்
- பதுரு பாட்டி வைபவம்
- ஆசீர்வாத ஆராதனை
- குங்குரு வைபவம்
- கலாசார பெரஹர
- விவேகப் போட்டிகள்
- பாடல் இரசணை
- கோலம்போடுதல், கிராமிய நடனம்
- கிரியைகள்
- அறுவடை கலை நிகழ்ச்சி
- கலாசார மாலைப்பொழுது
- மணமகள் பார்வை
- புதிய அறுவடை பண்டிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( வெசக் மற்றும் பொசன் வைபவங்கள்)

- தியானம்
- சில் அனுஷ்டித்தல்
- ஆன்மீக உரை
- பிரித்
- தன்சல்
- வெசக்
- பக்திப் பாடல் நிகழ்ச்சி
- கவிதை
- நேத்ரா பதிஸ்தாபன வைபவம்
- ஆசீர்வாத பூஜை
- பின்டபாத நிகழ்ச்சி
- பெரஹர
- தோரணம்
- போதி பூஜை

**விசேட பிரதேச நிகழ்ச்சிகள்**

- இரத்த தானம்
- போசாக்கு செயலமர்வு
- விசேட நினைவு தினம்டுஆசிரியர் தினம்
- முதியோர் சேவை நிகழச்சி
- பல்வேறுகருத்தரங்குகள் விரிவுரைகளும்
- மக்கள் நிவாரண சேவை நிகழ்ச்சி
- மதுசார ஒழிப்பு நிகழ்ச்சி
- முன்பாடசாலை
- சிரமதானம்
- கலை பங்களிப்பு
- சிறுவர் சந்தை
- ஓய்வுதியதாரர் சந்திப்பு
- லொத்தர் சீட்டிலுப்பு
- இரவு முகாம்கள்
- கைப்பணி கண்காட்சி
- மர நடுகை

**பிரதேச மருத்துவ நிகழ்ச்சிகள்**

- ஆயுர்வேத வைத்திய சேவை
- கண் மருத்துவ சேவை
- உளவியல் மருத்துவ சேவை

**VI. தேசிய வேலைத்திட்டம்:. விஷேட வேலைத்திட்டம் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள நடன வகைகளும் கலைஞர்களும்**

| நடன வகைகள் | ஒதுக்கப்பட்டுள்ள கலைஞர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | நடன உடைகள்/உபகரணங்களுடன் | நடன உடைகள்/உபகரணங்கள் இன்றி |
| **மேலைத்தேய நடன வகை** | | |
| வெஸ் நடனம் | 500 | 1,000 |
| சாஸ்திரீய பெண்கள் | 300 | 1,000 |
| **கீழைத்தேய நடன வகை** | | |
| கீழைத்தேய நடனம் பெண்கள் | 100 | 400 |
| கீழைத்தேய நடனம் ஆண்கள் | - | 500 |
| தெல்மி | 50 | 450 |
| **முகமூடி நடனம்** | | |
| கோலம், சன்னி மற்றும் பாலி வகை 03 | 60 | 200 |
| **சபரகமுவ நடன வகை** | | |
| சபரகமுவ நடனம் பெண்கள் | 200 | 400 |
| சபரகமுவ நடனம் ஆண்கள் | 100 | 250 |
| **கிராமிய நடனம்** | | |
| கிராமிய நடன வகை 20 மற்றும் குழு 25 உம் உள்ளடங்குகிறது. | | |
| | கலைஞர்களின் 40 பேர் உள்ளடங்கிய குழு 12 | குழு 50 |
| மத்தள கலைஞர்கள் | 1,500 | 2,000 |
| | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## I. நூலக சேவை

**நோக்கம்**

கலாசார நிலையங்களை அண்டி வாழ்கின்ற கிராமிய மக்களினதும் கலாசார பாடநெறிகளை கற்பதற்காக வருகின்ற மாணவர்களின் வாசிப்பு பழக்கம் மற்றும் இலக்கிய ரசணை என்பவற்றை மேம்படுத்துதல்.

கலாசார நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள நூலகங்களிலிருந்து புத்தகங்களை வாசிக்கப் பழகியுள்ள கிராமிய வாசகர்களின் எண்ணிக்கை 2010 அளவில் 37,000 ஆகும்.

| மாகாணம் | கலாசார நிலைய நூலகங்களின் எண்ணிக்கை | நடமாடும் நூலக சேவை நடைமுறைப்படுத்தப்பட டுள்ள கலாசார . நிலையம் | அங்கத்தவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மேல் மாகாணம் மா | 14 | - | 4654 |
| வடமத்திய மாகாணம் | 11 | 4 | 3469 |
| தென் மாகாணம் | 20 | 3 | 5004 |
| ஊவா மாகாணம் | 7 | 5 | 2924 |
| மத்திய மாகாணம் | 24 | 4 | 8781 |
| சப்ரகமுவ மாகாணம் | 12 | 2 | 5901 |
| வட மேல் மாகாணம் | 19 | - | 4909 |
| கிழக்கு மாகாணம் | 6 | 8 | 2034 |
| வட மாகாணம் | 1 | 1 | 67 |
| **மொத்தம்** | **114** | 27 | **37743** |

**நடமாடும் நூலக சேவை**

**நோக்கம்**

கலாசார நிலையங்களுக்கு செல்வதற்கான போக்குவரத்து வசதி குறைந்த பிரதேசங்களில் வாழ்கின்ற கிராமிய மக்களுக்கு அவர்களது வீடுகளுக்கு மிக அருகிலுள்ள நிலையமொன்றுக்கு புத்தகங்களை வழங்குவது இந்த கருத்திட்டத்தின் எதிர்பார்ப்பாகும்.

இந்த கருத்திட்டத்திற்காக நோர்வே தூதரகம் நிதியுதவி அளிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதோடு அதன் முதற் கட்டமாக 2008 ஆண்டிற்கு ரூபா 30 இலட்சம் தொகையொன்றும் அதன் இரண்டாம் கட்டமாக 2010 ஆம் ஆண்டிற்கு ரூபா 30.13 தொகையொன்றும் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. இதன் கீழ் போக்குவரத்து பிரச்சினை உள்ள பகுதிகளில் உள்ள கலாசார நிலையங்களுக்கு நடமாடும் நூல் நிலைய. சேவையை நடைமுறைப்படுத்துவதற்காக முச்சக்கர வண்டிகளை பெற்றுக்கொடுத்து வருடாந்நூலகங்களுக்கு புதிய புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.2.1.2. பங்களிப்புச் செய்த தேசிய நிகழ்ச்சித்திட்டங்களும் நிறைவேற்றப்பட்ட விசேட நிகழ்ச்சிகளும்.

| நிக்ழ்ச்சி/ இடம்பெற்ற மாதம் | நடைபெற்ற இடம் பிரதேச கலாசார நிலைய மட்டத்தில் | மேற்கொண்ட நடவடிக்கை | நன்மைபெறுநர்/- முன்னேற்றம் |
|---|---|---|---|
| தேசிய சுதந்திர வைபவத்தோடு இணைந்ததாக சுதந்திர வழிபாடுகள் கலாசார நிகழ்ச்சி (பெப்ரவரி ) | கண்டி தலதா மாளிகை வளாகத்தில் | சுதந்திர தின வைபவத்தோடு இணைந்ததாக நடன அம்சங்களுடன் 21 கலாசார நிலைய கலைஞர்கள் 1082 பேர் கலந்துகொண்ட நடன பெரஹரை தலதா மாளிகையில் இடம்பெற்றது | பாடசாலை மாணவர்களும் முதியோரும் |
| தேசிய சுதந்திர வைபவத்தோடு இணைந்ததாக தேசத்திற்கு மகுடம் கண்காட்சி (பெப்ரவரி) | பல்லேகலத்திற்கு மகுடம் கண்காட்சி பூமி. | தேசத்திற்கு மகுடம் இடம்பெற்ற 6 நாட்களில் மத்திய மாகாண கலாசார நிலையங்களின் மாணவிகளது கலாசார நிகழ்ச்சியும் கலாசார மாணவ, மாணவிகள் சுமார் 500 பேரின் பங்கேற்புடன் கலாசார வைபவமொன்றும் இடம்பெற்றது. | அதே |
| மார்ச்சு ( மார்ச்சு) | பிரதான நிகழ்ச்சி பியகம பிரதேச செயலாளர் பிரிவுடன் இணைந்து | களியாட்ட நிகழ்ச்சி | 85 கர்ப்பிணி தாய்மார்கள் |
| புத்தாண்டு பிறப்பு (ஏப்பிரல்) | நிலைய மட்டத்தில் நாடளாவிய ரீதியில் | சிங்கள் புத்தாண்டு மரபுகள், புத்தாண்டு வைபவம், புத்தாண்டு விளையாட்டுக்கள் | சிங்கள தமிழ் மக்கள் |
| "உள ஒளி பெறும் வெசாக் நிகழ்ச்சி தொடர்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சி (மே மாதம்) | மேல் மாகாண கங்காரம வெசக் வலயம் | வெசக் பக்திப் பாட்டு, தானம் அற செயல் நடாத்தல் | பௌத்த மக்கள் |
| சதகம் அசபுவ வெசக் நிகழ்ச்சி (யூன்) | மிஹிந்தலை | மிஹிந்தலையை மையமாக்க கொண்டு பிரதான வைபவம் இடம்பெற்றதோடு அனைத்து கலாசார நிலையங்களிலும் நற்கருமங்கள் தானம் வழங்குதல் இடம்பெற்றன. | அதே |
| வளவாளர் பயிற்சி நிகழ்ச்சி (யூலை) | அமைச்சு கேட்போர் கூடம் - அரச ஊழியர்கள் சிங்கள பிரிவில் 167 படைப்பக்களையும் தமிழ் பிரிவில் 160 படைப்புக்களையம் அனுப்பியுள்ளதோடு வெற்றிபெற்ற படைப்புக்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கும் வைபவம் நான்காவது காலாண்டின் இறுதியில் இடம்பெறவுள்ளது. | | |
| கலைரசனை நிகழ்ச்சி | கொழும்பு மாவட்டம் - கலைரசனை நிகழ்ச்சி 17 (17 - பாடசாலைகள்)<br>கம்பஹா மாவட்டம் - கலைரசனை நிகழ்ச்சி 02 (02 பாடசாலைகள்)<br>இரத்தினபுரி மாவட்டம் - கலைரசனை நிகழ்ச்சி 02 (02 பாடசாலைகள்) | | பாடசாலை பிள்ளைகள் |
| அரச ஊழியர்களுக்கிடையிலான போட்டிகள் (செப்தெம்பா) | சிறு கதை, சிறுவர் கதை, பாடல், பாடமைப்பு, இசையமைப்பு, சிறு நாடகம், சிறுகதை மொழிபெயர்ப்பு, மற்றும் ஓவியம் போன்ற துறைகளில் சிங்கள் மற்றும் தமிழ் மொழிமூலமாக அரச ஊழியர்களுக்கிடையே போட்டிகளை நடத்தி மாவட்ட, பிராந்திய, தேசிய மட்டங்களில் வெற்றியாளர்களுக்கு பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படுகின்றது. வெற்றிபெற்ற படைப்பகளை உள்ளடக்கி "பிரபாஷ்வர" என்ற பெயரில் புத்தகமொன்றும் வெளியிடப்படுகின்றது.<br><br>அரச ஊழியர்கள் சிங்கள பிரிவில் 167 படைப்பக்களையும் தமிழ் பிரிவில் 160 படைப்புக்களையம் அனுப்பியுள்ளதோடு வெற்றிபெற்ற படைப்புக்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கும் வைபவம் நான்காவது காலாண்டின் இறுதியில் இடம்பெறவுள்ளது. | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.2.1.3. விவேகப் போட்டிகள்

**நோக்கங்கள்**

- கலாசார நிலையங்களின் இசை, நடனம், நாடகம் போன்ற அழகியற்கலை பாடங்களை கற்கின்ற மாணவர்களிடையே பாட அறிவை விருத்தி செய்து கலைப் பார்வைக்கான வாய்ப்புக்களை வழங்குவது, அழகியல்சார் பாத்திரத்தை வளர்ப்பதும் ஆளுமை விருத்தியை ஏற்படுத்துவதுமாகும்.
- தேசிய கலாசார அம்சங்களை பேணிப் பாதுகாத்தல்

பிரதேச மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கலாசார நிலையங்கள் மூலம் மாணவ, மாணவியரிடையே விவேகப் போட்டித் தொடர்களை நடத்தி மாவட்ட, அகில இலங்கை ரீதியாக நடாத்தி பரிசுகள் வழங்கி வைக்கப்படுகின்றன.

அதன்படி 2010 விவேகப் போட்டிகளுக்காக கலாசார நிலையங்களின் பங்கேற்பு

| போட்டித் துறை | கலாசார நிலையங்களின் எண். | முன்வைக்கப்பட்ட போட்டி எண். |
|---|---|---|
| விவேக இசை போட்டிகள் | 99 | 294 |
| விவேக நடன போட்டிகள் | 124 | 365 |
| விவேக சிறு நாடக போட்டிகள் | 58 | 58 |

### 1.2.1.4. காலி மாவட்ட இலக்கிய விழா

கௌரவ தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.எச். குணரத்ன வீரக்கோண் அவர்களின் ஆலோசனையின் பேரில் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் காலி மாவட்ட செயலகம் ஆகிய இணைந்து காலி மாவட்ட இலக்கிய விழா கரன்தெனிய மத்திய மகா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது. அங்கு மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகளில்:-

- இலக்கிய கலை மூலமும் மொழி இலக்கியத்தின் மூலமும் தேசத்தை வளர்த்த பிரபல கலைஞர்கள் இருபது பேருக்கு விருதுகளும் பண முடிச்சுகளும் வழங்கப்பட்டன.
- கவிதை மற்றும் கட்டுரை போட்டிகளின் வெற்றிபெற்ற 44 சிறுவர், சிறுமியர்களுக்கு சான்றிதழ்களும் பணப் பரிசுகளும் வழங்கப்பட்டன.
- ரத்ன சிங்க விஜெசிங்க, பண்டுல எதகம், விஜேரத்ன வரகாகொட போன்ற புத்திஜீவிகள் உரையாற்றினர்.
- பிரபல பொம்மலாட்டக்கலை நிபுணர்களின் வழிகாட்டலின் கீழ் பொம்மலாட்ட காட்சியொன்றும் நடத்தப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1.2.1.4. கலாசார நிலையங்களின் மாணவ, மாணவியர்கள் கலாசார கண்காட்சிக்காக வெளிநாட்டு பயணங்களில் பங்கேற்றல்.**

நாடு முழுவதும் நிர்மாணிக்கப்பட்டுள்ள 155 கலாசார நிலையங்களில் விசேட கலை ஆற்றல்களை காட்டுகின்ற மாணவ, மாணவியர்களைக் கொண்ட குழுவொன்று செயற்படுவதோடு வெளிநாட்டு பயணங்களுக்கு அக்குழுவிலுள்ள மாணவ, மாணவியர்கள் முற்படுத்தப்படுகின்றனர்.

**2010 ஆம் ஆண்டில் வெளிநாட்டு பயண குழுவின் அங்கத்தவர் எண்**

**விசேட ஆற்றல்க்ள உள்ள கலாசார நிலையங்களின் மாணவ, மாணவியர்கள் - 85**

**நடன வளவாளர்கள் - 59**

**முரசு வளவாளர்கள் 52**

**வெளிநாட்டு பயணத்திற்கான கலாசார நிலையங்களின் பங்களிப்பு - 2010**

| வருடம், திகதி காலம் | பயணம் | பங்கேற்ற கலைஞர் எண். |
|---|---|---|
| 2010.02.0207 | நேபாளம் - இலங்கை தேசிய சுதந்திர தின நினைவு வைபவம் | 09 |
| 2010.02.04-07 | சென்னை - இலங்கை 62 ஆவது தேசிய சுதந்திர தின நினைவு வைபவம் | 10 |
| 2010.03.17 22 | இந்திய - ஜுவல் ஒப் மஜ்கட் கப்பலை வரவேற்கும் வைபவம் | 09 |
| 2010.04.08 17 | மலேசியாவின் 13 வது அச்சிபிலாகே வாத்திய விழா 2010 | 09 |
| 2010.04.12 21 | பிலிப்பைன் - சர்வதேச நடன விழா | 09 |
| 2010.10.04 12 | தென் கொரிய - "சிஒனன் சர்வதேச ஹங்ராங்வங் நடன விழா | 13 |



**சங்கீத கலைஞரின் கீழ்நாட்டு நடனத்தின் விசேட சந்தர்ப்பம்**

**1.2.2. வெளிநாட்டு கலாசார தொடர்புப் பிரிவு**

இலங்கை கலாசாரத்தை உலக மக்கள் மத்தியில் பரப்பும் நோக்குடன் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது இந்த பிரிவின் மேற்கொள்ளப்படுகின்றது.

- கலாசார குழுக்களை வெளிநாடுகளுடன் பரிமாறிக் கொள்ளுதல்
- கல்விச் சுற்றுலாவுக்காக கலாசார குழுக்களை பரிமாறிக் கொள்ளுதல்
- கட்புல மற்றும் கட்புலனாகா கலாசார துறைகளில் நிபுணர்களை வெளிநாடுகளிலிருந்து தருவித்தல்.
- கலாசார கண்காட்சிகளை வெளிநாடுகளில் நடாத்துதல்
- சர்வதேச கலாசார கண்காட்சிகளில் பங்கேற்றல்
- இலங்கையில் சர்வதேச கலாசார கண்காட்சி, மாநாடுகளை ஏற்பாடு செய்தல்
- வெளிநாட்டு பாடநெறி, மாநாடு, செயலமர்வு ஆகியவற்றுக்கு உத்தியோகத்தர்களையும் தேவையான போது இலங்கை தூதுக்குழுக்களையும் அனுப்புதல்
- கலாசார முக்கியத்துவமுள்ள தொல்பொருளியல் இடங்களை பாதுகாத்தலும் கலாசார பெறுமானங்களை பாதுகாத்தலும்
- இலங்கையின் கலாசார மேம்பாட்டுக்காக சர்வதேச நிறுவனங்களின் யுனெஸ்கோ, சார்க், ஐகேம்ஸ், பிம்ஸ்டெக் போன்றவற்றிடமிருந்து உதவிகளை பெற நடவடிக்கை எடுத்தல்.
- வெளிநாட்டு உதவி கிடைக்கின்ற கருத்திட்டங்கள் குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ஏனைய நாடுகளுடன் இருதரப்பு உடன்படிக்கைகளை செய்தலும் உடன்படிக்கைகளை புதுப்பித்தலும் அதற்கேற்ப நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்தல்.
- சர்வதேச கலாசார போட்டிகளுக்கு இலங்கையர்களை பங்குபெறச் செய்தல் உள்ளிட்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.
- வெளிநாடுகளிலுள்ள பெறுமதிமிக்க இலங்கை தொல்பொருட்களை மீளக்கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.2.2.1 வெளிநாட்டு விஜயங்கள் - 2010

| நிகழ்ச்சித்திட்டங்கள் | நாடு | காலம் | பங்கேற்பு |
|---|---|---|---|
| 11 ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி | பங்களாதேஷ் | சன 29 பெப் 09 | 11 |
| நூதனசாலை முகாமைத்துவம் பற்றிய பயிற்சி செயலமர்வு | ஜப்பான் | சன 10 - 29 | 03 |
| 19 வது ஹவானா சர்வதேச புத்தக கண்காடசி | கியுபா | பெப் 11 - 21 | 01 |
| சார்க் இலக்கிய வழா | இந்தியா | மார்ச் 26 -28 | 02 |
| அரச மற்றும் தனியார் துறை உறுப்பினர்களுடனான பிராந்திய சுற்றுலா அபிவிருத்தி | ஜப்பான் | மே 11 -29 | 01 |
| விசேட அறிக்கையிடல் செயலமர்வு இரண்டாம் சுற்று | இந்தியா | யூன் 02 - 05 | 01 |
| சர்வதேச ஒத்துழைப்புடன் கட்புலனாகாத பாராம்பரியங்களை காப்பதற்கான பிராந்திய ஆலோசனை கூட்டம் | தாய்லாந்து | யூலை 20 - 21 | 01 |
| 4 வது பீஜிங் சர்வதேச கலை இரு வருட மாநாடு – 2010 | மக்கள்சீனக் குடியரசு | செப் 19-23 | 01 |
| சீன விஜயம் | சீனா | ஆகஸ் 24 செப் 03 | 02 |
| கடல்கீழ் கலாசார பாரம்பரியங்களில் ஜீ.ஐ.எஸ். பிரயோகம் பற்றிய உயர் பயிற்சி பாடநெறி | தாய்லாந்து | செப் 20 - 29 | 02 |
| ஜப்பானில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் கலாசார பாரம்பரியங்களின் பேணுகை, மீட்பு பற்றிய பயிற்சி பாடநெறி | ஜப்பான் | செப் 07 –ஒக் 07 | 01 |

1.2.3. ஊடக பிரிவின் "கலாசார செய்தி" என்ற பெயரிலான மும்மாத செய்தி சஞ்சிகை



அமைச்சின் ஊடகப் பிரிவு 2010 சனவரி மாதத்தில் இருந்து "கலாசார செய்தி" என்ற பெயரிலான மும்மாத செய்தி சஞ்சிகையொன்றை வெளியிட ஆரம்பித்துள்ளது.

**நோக்கம்** - எமது அமைச்சுக்கு உரித்தான கலாசார அலுவல்கள் திணைக்களம், தேசிய நூதனசாலை, தொல்பொருள் மற்றும் தேசிய ஆவணவாக்கல் திணைக்களம், மத்திய கலாசார கலாசார நிதியம். டவர் மண்டப தியட்டர் மன்றம் போன்ற நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சிகள், தகவல் மற்றும் செய்தி பெறுமானமுள்ள போன்ற வாய்ப்புக்கள் குறித்து தெளிவுபடுத்துதல்.

**உள்ளடக்கம்** - அமைச்சின் கீழ் நடத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் பற்றிய தகவல்கள், கல்விசார் ஆவணங்கள், இலக்கிய மற்றும் இரசணை அம்சங்கள், புகைப்பட அம்சங்கள் ஆகியன.

**வினியோகமும் / நன்மைபெறுநர்களும்.**
சனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், அமைச்சர்கள், அமைச்சு செயலாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கலைஞர்கள், புத்திஜீவிகள், பிரதேச செயலகம், கலாசார நிலையங்கள், பல்கலைக்கழகம், தேசிய பாடசாலைகள், மத்திய மகா வித்தியாலயம் மற்றும் விகாரைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.2.4 கிழக்கின் உதயம் நிகழ்ச்சித் திட்டம்

செரண்கட புராதன விகாரை, மெவலான ஆசிரமம், நாவின்ன ரஜமகா விகாரை, பதியதொர ரஜமகா விகாரை மற்றும் கொல்லேகம ரஜமகா விகாரை போன்றவற்றுக்கு 2 மலசலகூடம் என்ற விதத்தில் நிர்மாணத்திற்காக ரூபா 626,835 நிதி ஒதுக்கிட்டை பெற்றுக் கொடுத்துள்ளது.

## 1.2.5. உள்நாட்டு / வெளிநாட்டு உதவி பெறுகின்ற கருத்திட்டங்களின் முன்னேற்றங்கள்

### 1.2.5.1. ஆதி வாசிகளின் கலாசாரத்தை பாதுகாக்கும் கருத்திட்டம்

வேகமாக மறைந்து வருகின்ற ஆதிவாசிகளின் இயற்கையுடனான வாழ்க்கை வட்டம், வைத்திய முறை போன்ற பண்டைய அறிவு, பழக்க வழக்கங்கள், கிரியைகள், நாட்டார் பாடல், மொழி இலக்கியம் கலை ஆற்றல்கள் போன்ற கலாசார அம்சங்களை பாதுகாப்பது இதன் நோக்கமாகும்.

அடிப்படை அம்சங்களும் முன்னேற்றமும்

| நோக்கம் | செயற்பாடுகள் | பொறுப்புகள் | முன்னேற்றம் (2010 செப் 30 இற்கு) |
|---|---|---|---|
| 1 ஆதிவாசிகளின் கலையம்சங்களை பாதுகாத்தல் | I. ஆதிவாசிகளின் முக்கிய வாழ்க்கை தகவல்கள் உள்ளிட்ட ஒளி அறிக்கை நிகழ்ச்சியொன்றை தயாரித்தல் | கொழும்பு பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது | |
| | II. வேடுவர்களின் கலாசார தேவைப்பாடுகள், கட்புலன்சார் கலாசாரம், வெளியீடுகள் தொடர்பான தொல்பொருளியல் கற்கை | தொல்பொருள் பட்டப் பின் படிப்பு நிறுவவனம் | அளவாய்வு செயற்பாடுகளினால் 50 வீதம் முடிவடைந்துள்ளது |
| 2 வேகமாக மறைந்து வருகின்ற ஆதிவாசிகளின் கலாசாரத்தை பாதுகாத்தல் | வேடுவர்கள் பற்றிய சமூக மானுடவியலல் ஆராய்ச்சி | கொழும்பு பல்கலைக்கழகம் | அளவாய்வு செயற்பாடுகளினால் 60 வீதம் முடிவடைந்துள்ளது |
| 3 ஆதிவாசிகளின் பாரம்பரிய அறிவை பாதுகாத்தல் | I. ஆதிவாசிகளின் பாரம்பரிய வைத்திய முறை குறித்த ஆராய்தலும் மேம்படுத்துதலும் | ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம் | அளவாய்வு செயற்பாடுகளினால் 80 வீதம் முடிவடைந்துள்ளது |
| | II. ஆதிவாசிகளின் பாரம்பரிய உணவு முறைகுறித்த விடயத்தை ஆராய்தலும் மேம்படுத்துதலும் | | |
| 4 சுற்றுலா மேம்பாட்டு அபிவிருத்தி | I. ஆதிவாசிகள் மக்கள் நூதனசாலையை நிறுவுதல் | தேசிய நூதனசாலை திணைக்களம் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. 1.2.5.2. **ரங்சமடம முன் வரலாற்று மயானத்தின் பாதுகாப்பும் நூதனசாலை நிர்மாணமும்**

சபரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் கொலன்ன பிரதேச செயலகத்திற்கு உரித்தான ரங்சாமடம என்ற பெயரையுடைய ரங்சமடமே அரச வித்தியாலய வளாகத்தின் புராதன மயான பூமியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தொல்பொருள் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் மூலம் 2007 ஆம் வருடத்தில் யூன் 28 ஆம் திகதியிலிருந்து 5 வார காலத்தில் அந்த மயானபூமி அகழ்வுக்கு உட்படுத்தியதோடு அந்த அகழ்வின்போது கல்லரை அச்சுகள் ஆறும் அச்சுகளற்ற கல்லரைகள் இரண்டும் கண்டுபிடிக்கப்பட்டன.

ரங்சமடம பண்டைய மயான பூமி அகழ்வின் போது கிடைக்கப்பெற்ற கரியினை இந்தியாவுக்கு அனுப்பி கால தீர்மானித்த போது இந்த மயான பூமியின் கி.மு.1359 வரை செல்கின்றது என குறிப்பிடப்படுகின்றது. இன்றோடு 3,250 வருடங்களுக்குப் முன்னர் யுகம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள இந்த இடமும் அதன் அருகிலே அகழ்வு கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட்கள் பொதுமக்களின் பார்வைக்காக நிலையான காப்பொன்றும் நூதனசாலையொன்றும் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**முன்னேற்றம்** - ரங்சமடம முன் வரலாற்று மயான பூமி அமைந்துள்ள இடத்தில் தற்போதுள்ள பாடசாலையை அகற்றுவதற்காக புதிய இரண்டு மாடி பாடசாலை கட்டிடமொன்று அமைத்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. (அமைச்சினால் பெற்றுக்கொண்ட தொகை ரூ. 6 மில்லியன்)

**எதிர்கால செயற்பாடுகள்**

- புதிய பாடசாலை கட்டிடத்தின் சுற்றுச்சூழல் புராதனமானது என குறிப்பிடும் வகையிலான பல்வேறு பெருத்தமான மாதிரிகளை கொண்டு வடிவமைத்தல்
- 2011 பெப்ரவரி அளவில் அனைத்து அகழ்வு நடவடிக்கைகளையும் பூர்த்தி செய்தல்
- பூமியை சுவீகரித்துக் கெள்ளுதல்
- நூதனசாலையின் நிர்மாணத்திற்காக மதிப்பிடுதலும் திட்டமிடுதலும்
- நூதனசாலையின் பணி ஆரம்பித்து 6 மாதங்களுக்குள் அதன் அனைத்து நிர்மாணப் பணிகளையும் பூர்த்திசெய்து மக்கள் காட்சிக்காக பொருத்தமான நிலையில் வைத்தல்.

**1.2.5.3. சுனாமி ஞாபகார்த்த நூதனசாலை - ஹக்கடுவ, பெரேலிய**

2004 டிசம்பர் 26 ஆம் திகதியன்று ஆயிரக்கணக்கான உயிர்களும் சொத்துக்கள் மற்றும் கரையோர சூழல்களையும் அழித்து இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தை நினைவுகூருவதற்கும் அதன் அடையாளமாக சுனாமி நினைவு நூதனசாலை நிர்மாணிக்கப்படுகிறது.

**இந்த நூதனசாலை மூலம்**

- சுனாமி நிலையை அறிய முடியுமானவாறு சுனாமி பற்றியும் அனர்த்த முகாமைத்துவம் தெளிவுபடுத்துவது பிரதானமாக இடம்பெறுகின்றது.
- நன்மை பெறுநர் - பாடசாலை பிள்ளைகள், கடற்கரையோர மக்கள், உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுப்பயணிகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் எதிர்கால பரம்பரையினர்.

**மதிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. 210 மி. (உள்நாட்டு நிதியம்)**
**ஆரம்பம் 2009 பூர்த்தி 2011**

**முன்னேற்றம்** - நூதனசாலை நிர்மாணிப்புக்காக 2010 நவம்பர் மாதத்தில் கேள்வி மனுக்களை கோரி, கேள்விப் பத்திரங்களை வழங்கி வருட இறுதிக்கு முன்னர் நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1.2.5.4. சார்க் கலாசார நிலையம் - மாத்தறை, நாவிமன, மொறகெடியஹேன.**

பிராந்திய கலாசார பாரம்பரியங்களை பாதுகாத்தல் கட்டியெழுப்புதல் பல்வேறுபட்ட மரபுகள், உயரிய கலாசார பல்வகைமைகள் மத்தியில் ஒருங்கிணைப்புக்களை கட்டியெழுப்பி சார்க் கலாசார நிலையமொன்றை நிர்மாணித்தல் இதன் பிரதான நோக்கமாகும். இந்த நிலையம் பிராந்திய கலைஞர்களின் முதன்மை கூட்ட தலைமையகமாகவும் பிராந்திய கலைஞர்களை ஊக்குவிப்பதற்கும் அவர்களுக்கு அனுசரணை வழங்குவதற்கு நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துகின்ற நிலையமொன்றாக செயற்படும்.

**மதிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. 800 மி. (உள்நாட்டு நிதியம்)**

**ஆரம்பம் 2009 மே மாதம் - பூர்த்தி 2011 மே மாதம்**

**சார்க் கலாசார நிலைய கட்டமைப்பு -**

- கேட்போர் கூடம், நடன மண்டபம் மற்றும் முன் பயிற்சி அறை, மாநாட்டு, விரிவுரை மண்டபம்
- கண்காட்சி வலயம், திறந்த நாடக அரங்கு மற்றும் திறந்த பணி மனை
- நூதனசாலை பிரதேசம், ஒளி, ஒலி பதிவு அறை
- திரைப்பட கூடம், தகவல் தொழிநுட்ப அறை, வதிவிட வசதிகள், சிற்றுண்டிச் சாலை, அலுவலக மற்றும் வதிவிட பதவியினருக்கான உத்தியோகபூர்வ வீடுகள்

**முன்னேற்றம் - அதிமேதகு சனாதிபதியின் ஆலோசனையின் பேரில் கருத்திட்டத்தை துரிதப்படுத்தும் நோக்கில் இங்கு நிர்மாணப் பணிகள் இலங்கை ஆயுதப் படையினருக்க பொறுப்பு வழங்கப்பட்டுள்ளதோடு வருட இறுதிக்கு முன்னர் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றது.**

**1.2.5.5. இலங்கை – நெதர்லாந்து கலாசார ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டம் - முதல் கட்டம்**

கலாசரா முக்கோண கேட்பாட்டுடன் இணைந்ததாக தென் மாகாணத்திற்கும் கலாசார முக்கொணமொன்று பெயரிட்டு தென் மாகாணத்தில் ஒல்லாந்தர் காலத்திற்கு உரித்தான வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடங்களை பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி மூலமாக அவற்றின் பெறுமதியை எதிர்கால பரம்பரைக்கு கையளித்தல், கலாசார சுற்றுலா துறையை முன்னேற்றுவதனூடாக பிரதேச மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் போன்ற அடிப்படை நோக்கங்களுடன் நெதர்லாந்து அரசாங்கத்தின் விசேட உதவியுடன் இக்கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

இதன் கீழ் 19 கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதோடு முதல் கட்டமாக ரூபா 702 மில்லியன்களை நெதர்லாந்து அரசாங்கம் வழங்கியுள்ளது. 2006 மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டம் 2009 வருடத்தில் டிசம்பர் அளவில் முடிவடையவுள்ளது. 2009 செப்டம்பரில் 9 கருத்திட்டங்கள் பணிகளை பூரணமாக பூர்த்திசெய்திருந்ததோடு ஏனைய 10 கருத்திட்டங்களதும் பாதுகாப்பு மற்றும் மீள்பாதுகாப்பு நடவடிக்கைகள் 2009 இறுதியளவில் பூர்த்திசெய்ய உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும் 4 கருத்த்திட்டங்களின் பணிகளை பூர்த்திசெய்வதற்காக 2010.03.03 ஆம் திகதி வரை உடன்படிக்கை காலம் நீடிக்கப்பட்டு அக்காலப்பிரிவில் கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டன. 2008.06.01 ஆம் திகதியில் ஆரம்பிக்கப்பட்ட திருகோணமலை பழயை போர்த்துக்கேய கடற்படை ஆணையாளர் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் பாதுகாப்பு மற்றும் மீள் பாதுகாப்பு நடவடிக்கைகள் 2010செப்தெம்பர் 30 திகதிக்கு பூர்த்திசெய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை – நெதர்லாந்து கலாசார ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்ட முதல் கட்டத்தின் கீழ் பூர்த்திசெய்யப்பட்ட கருத்திட்டங்கள்

| கருத்திட்டம் | ஆரம்பத் திகதி | முடிவுத் திகதி | மதிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ.மி | 2010.10.30 இல் மொத்த செலவினம் ரூ.மி |
|---|---|---|---|---|
| காலி கோட்டையின் பண்டைய ஒல்லாந்தர் களஞ்சியத்தை பாதுகாத்தல் | 2006.05.05 | 2008.05.30 | 30.57 | 43.37 |
| காலி கோட்டையின் பண்டைய கடைச்சுவர் பாதுகாப்பு | 2006.05.05 | 2009.12.31 | 133.7 | 134.03 |
| கதிர்காம பல்லின நூதனசாலை மற்றும் தகவல் நிலையத்தை அமைத்தல் | 2006.06.01 | 2008.08.25 | 65.8 | 67.98 |
| காலி கோட்டையின் பண்டைய தனியார் வீடுகளின் பாதுகாப்பு | 2006.06.01 | 2008.12.31 | 48.48 | 48.55 |
| கலாசார சுற்றுலா திட்டத்தை கட்டியெழுப்புதல் | 2006.06.01 | 2008.10.31 | 2.5 | 2.5 |
| காலி சமுத்திர நூதனசாலை | 2006.05.05 | 2009.02.01 | 15.0 | 14.01 |
| கடுவன போர்த்துக்கேய கோட்டை பாதுகாப்பும் அதன் நில அழங்காரமும் | 2006.06.01 | 2009.07.31 | 30.0 | 32.17 |
| காலி கோட்டையின் பண்டைய உட்காண் வலையமைப்பை புனர்நிர்மானம் செய்தல் | 2006.06.01 | 2009.01.31 | 16.0 | 17.41 |
| பண்டைய பன்றி போக்கு வேலியை பாதுகாத்தல் | 2006.06.01 | 2009.01.31 | 10.0 | 8.30 |
| மாத்தறை நட்சத்திர கோட்டை பாதுகாப்பு | 2006.06.01 | 2009.07.31 | 5.0 | 10.10 |
| காலி கொட்டையின் எவென்ஸ்டர் மண்டபம் உள்ளிட்ட நூதனசாலை தொகுதியின் எஞ்சிய பகுதியை நிர்மாணித்தல் | 2006.06.01 | 2010.03.04 | 91.0 | 98.4 |
| காலி கோட்டை சுற்றுலா தகவல் நிலைய நிர்மாணம் | 2007.01.01 | 2010.03.04 | 10.5 | 10.2 |
| மாத்தறை பெரமாது பள்ளியின் பாதுகாப்பு | 2006.06.01 | 2010.03.31 | 6.4 | 6.38 |
| பரஸ்பர பாரம்பரிய நிலைய பலப்படுத்துகை | 2006.06.01 | 2009.12.31 | 24.7 | 24.25 |
| பண்டைய போர்த்துக்கேய ஆவண பாதுகாப்புக்கான தொழில்நுட்ப உதவியை பெற்றுக்கொடுத்தல் | 2006.06.01 | 2009.12.31 | 16.5 | 14.56 |
| தேசிய நூதனசாலையின் பண்டைய ஆடைத் தொகுதியின் பாதுகாப்பு | 2006.06.01 | 2009.12.31 | 2.5 | 3.83 |
| கலாசார தகவல் தளமொன்றை தயாரித்தல் | 2006.06.01 | 2009.12.31 | 3.0 | 2.96 |
| கருத்திட்டங்களின் கண்காணிப்பு பணிக்காக | 2006.06.01 | 2010.03.31 | 22.31 | 22.7 |
| மத்திய கலாசார நிதியாத்திற்கான வரவுசெலவுத்திட்ட உதவியை வழங்கல் | 2006.06.01 | 2009.12.31 | 176.57 | 176.3 |
| திருகோணமலை பண்டைய போர்த்துக்கேய ஆணையாளர் வீட்டின் பாதுகாப்பும் புனர்நிர்மானமும் | 2008.06.01 | 2010.09.30 | 75.0 | 72.8 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலி கடல் நூதனசாலையின் அவொன்டிஸ்டர் மண்டபமும்
பழைமைவாய்ந்த கப்பலின் மாதிரியும்



புனர்நிர்மாணம் செய்தலும் பாதுகாத்தலுக்குமாக
தெரிவுசெய்யப்பட்ட திருகோணமலை சூழலிலுள்ள
கொமிசனரின் வீடு

**1.2.5.6 இலங்கை நெதர்லாந்து கலாசார ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டம் இரண்டாவது கட்டம் - யாழ்ப்பாண கோட்டை பாதுகாப்பு கருத்திட்டம்**

கடந்த காலங்களில் நிலவிய யுத்த நிலைமை காரணமாக அழிந்த வரலாற்று பெறுமதிமிக்க யாழ்ப்பாண கோட்டைச் சுவர் மற்றும் அதோடு தொடர்புடைய நிர்மாணங்களை பாதுகாத்தல் இக்கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

கி.பி.1619 இல் போர்த்துக்கேயர்களினால் யாழ்ப்பாண கோட்டைச் சுவர் கட்ட ஆரம்பிக்கப்பட்டதாகவும் அது ஒல்லாந்தர்களினால் பூர்த்திசெய்யப்பட்டதாகவும் பின்னர் இலங்கையை அக்கிரமித்த பிரித்தானிய படை யுத்த நடவடிக்கை மற்றும் நிருவாக நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தி இருப்பதாகவும் வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றது.


**பாதுகாப்பு கருத்திட்டத்தின் பிரதான பணிகள்**

- பூரண கோட்டைச் சுவரை பாதுகாத்தல்
- கோட்டைச் சுவர் உள்ளே உள்ள வரலாற்று நினைவுத் தூபியை பாதுகாத்தல்
- வெளிப்புற கோட்டைச் சுவரை பாதுகாத்தல்
- வரலாற்று பெறுமதிகொண்ட பண்டைய நீர் அகழிகளில் உள்ள சேறு மற்றும் கண்ணி வெடிகளை அகற்றி பாதுகாத்தல்
- பண்டைய யாழ்ப்பாண கோட்டையுடன் தொடர்புடைய சூழல், வரலாற்று தகவல்கள் மற்றும் ஆதாரத்துடனான நில வரைபடம் என்பவற்றை திட்டமிட்டு பாதுகாத்தல்.

**மதிப்பிடப்பட்ட தொகை ரூ.மி. 104.5**
**நிதிப் பங்களிப்பு ▸**

நெதர்லாந்து அரசாங்கத்தின் பரஸ்பர பாரம்பரிய நிதியம் . ரூ.மி. 62.1
இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு ரூ.மி. 42.4

**ஆரம்பம் - 2009 நவம்பர்** **இறுதி - 2012 திசெம்பர்**



முன்னேற்றம் - ஆரம்ப அளவீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு இதுவரை பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கோட்டை சுவரின் கிழக்கு பக்கமாக உள்ள கோலண்டன் மற்றும் டோஸ்னி போன்ற இரண்டையும் முழுமையாக பாதுகாத்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
2010 செப்தெம்பர் 31 ஆம் திகதி வரையான செலவு ரூ.மி.17.6 ஆகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1.2.5.7.** கொழும்பு நெலேட்ஸ் மைதானத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற சர்வதேச மட்டத்திலான நாடகக் கலை நடன மண்டபம்




பொலன்னறுவை தாமரை தடாகத்தின் மாதிரி



கட்டிடக்கலை மாதிரி

நோக்கம் - இசைக் கலையின் முன்னேற்றத்திற்காக அனைத்து நவீன நாடக மண்டப வசதிகளைக் கொண்ட சர்வதேச தரத்திலான இசைக் கலை நாடக மண்டபத்தை நிர்மாணித்தலும் சின உறவுகளை வளர்த்தலும்.

நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற இசைக் கலை மண்டபம் (2010 செப்டெம்பர் 30 இற்கு)




**இசைக் கலை மண்டபத்தின் நிாமாணப்பணிகள் அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பங்கெற்புடன் 2008 மே மாதம் 23 ஆரம்பித்து வைக்கப்பட்டது.**

**இசைக் கலை மண்டபத்தின் கட்டமைப்பு ▸**

கட்டிடம்

- மொத்த காணி பரப்பளவு ச.மீ 21,760
- கட்டிட தள பரப்பளவு - ச.மீ 14,000
- தள அலங்காரம் ச.மீ 5,344
- வழி மற்றும் வாகன நிறுத்துகை ச.மீ 5.270
- வாகன எண்ணிக்கை தளப்பகுதி - 183
- வாகன எண்ணிக்கை தளமட்டத்திற்கு கீழ் 76

- பிரதான நாடக மண்டபம்

1288 ஆசனங்கள் / மின்சக்தியால் இயங்கும் மேடை

- கட்டிட முகட்டில் உள்ள திறந்த நாடக அரங்கு
- கட்டிய நுழைவாயிலிலுள்ள படிக்கட்டின் முன் பகுதியும் திறந்த நாடக அரங்காக உபயோகிக்கும் தன்மை.
- ஓய்வறை, ஆடை ஒப்பனை அறை
- உணவுசாலை

நாடக மண்டபம்

**முன்னேற்றம்** அரங்காற்றுகை கலை மண்டபத்தின் நிர்மாண பணிகள் இறுதிக்கட்டத்தை அடைந்திருப்பதோடு கட்டிடத்தின் பூரண அமைப்பு தளக் கற்கள்/ சுவர் கற்களை பிடித்தல், நீர் வழங்கல் போன்ற பிரதான செயற்பாடுகள் அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. அதாவது மொத்த வேலையில் 88 வீதமான அளவு செப்தெம்பர் அளவில் பூர்த்தி செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எமது மக்கள் இசை பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காக நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய மக்கள் இசை பாதுகாப்பு நூலகமொன்று**

இலங்கை மக்களின் வாழ்கையுடன் பின்னிப்பிணைந்த பண்டைய காலம் முதல் நடைமுறையிலிருந்து வருகின்ற மக்கள் பாட்டு, மக்கள் இசை, அவற்றின் ஓசைநயம் வம்ச கதைகள் போன்ற மக்கள் பாராம்பரியங்களை தற்கால சமூகத்திலிருந்து விரைவாக தூரமாகிச் செல்கின்ற அச்சுறுத்தலுக்கு உட்பட்டுள்ளளோம். கலாசார விசேட அம்சங்கள் கொண்ட இந்த கலையம்சங்கள் பற்றிய தகவல்களை இழந்தவிடாது அவற்றை எதிர்காலத்தில் மக்களின் வாழ்க்கைக்கு சேர்க்கின்ற நோக்கத்துடன் பாதுகாப்பது இந்த கருத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

அதன்படி தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் நவீன தொழில்நுட்பங்களுடன் கணனி தொழில்நுட்ப வலையமைப்புடன் கூடிய மக்கள் பாடல் பாதுகாப்பு நூலகமொன்று ஜோன் த சில்வா ஞாபகார்த்த அரங்கு மற்றும் கலா மன்ற வளாகத்தில் 2010 செப்தெம்பர் 23 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பின்னர் இந்த நூலகம் கொழும்பு 07 நெமேட்ஸ் மைதானத்தில் தேசிய கலை நாடக அரங்கை தாபிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**பிரதான செயற்பாடுகள்**

- தற்போது நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் பொதுமக்களிடமும் பல்வேறு நிறுவனங்களிடமும் காணப்படுகின்ற இந்த கலையம்சங்களை ஒன்று திரட்டல்.
- அந்த தகவல்களை இலக்க தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பதிவுசெய்வதும் கணனி மயப்படுத்துவதனூடாக பாதுகாப்பதும்
- தேவைக்கேற்றவாறு உபயோகிக்கத்தக்க வகையில் ஒரு நிறுவனத்தினுள் களஞ்சியப்படுத்தி வைத்தல்
- அவற்றை சமூக மயப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

போன்ற உபாயமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது



கௌரவ தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மக்கள் இசை பாதுகாப்பு நூலகத்தை திறந்து வைத்தல்




மக்கள் இசை பாதுகாப்பு நூலகத்தில் ஒரு காட்சி



வைபவத்தில் கலந்துகொண்ட கொரிய கென்சட் நிறுவனத்தின் பணிப்பாளர் திரு.டொம் அவர்கள் உரையாற்றுகையில்

**எதிர்காலத்தில் செய்ய திட்டமிடப்பட்டுள்ள பணிகள்**

- நாட்டார் பாடல் மற்றும் அதோடு தொடர்புடைய கலையம்சங்கள் பற்றிய ஒளி நாடாக்களை சேகரித்தல், அவற்றை பாதுகாத்தல், பொதுமக்களின் பாவனைக்கு சந்தர்ப்பம் வழங்குதல்
- தற்போது வரண்டு காணப்படுகின்ற மக்கள் கலையம்சங்கள் கொண்ட பகுதிகளுக்கு சென்று விடியோ படமெடுத்தல்.
- பாரம்பரிய கலைஞர்கள் தொடர்பான தகவல் தளமொன்றை அமைத்தல்
- நாட்டார் பாடல்களை ஊக்கப்படுத்துவதற்காக கல்விச் செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல்
- நாட்டார் பாடல் அடிப்படையாகக் கொண்ட படைப்புகள், ஆவணங்களை வெளியிடுவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.3. நான்காவது காலாண்டுக்கான உத்தேச நிகழ்ச்சிகள் - 2010

**கிழக்கு உதயம் நிகழ்ச்சித்ததிட்டம்**

மொரவெவ பெத்தாரம புராதன விகாரையும் மொரவெவ சிறி விஜயராம விகாரைக்கான 4 மலசலகூடமும் மொரவெவ திவுரும்கல ரஜமகா விகாரைக்கு குடிநீர் வசதிகளை வழங்குதல்.

**வெளிநாட்டுப் பயணம்**

| நிகழ்ச்சித்திட்டம் | நாடு | காலம் | பற்கேற்பு |
|---|---|---|---|
| பொதுநலவாய பாராளுமன்ற மாநாடு | வியன்னா | ஒக் 26 -29 | |
| தீபாவளி பண்டிகை 2010 | சிங்கப்பூர் | ஒக் 30 | 12 |
| கலாசார பாரம்பரியத்திற்கான சர்வதேச துரித பாடநெறி | கொரியா | ஒக் 22- நவம் 05 | 01 |
| சர்வதேச நாடக பரீட்சார்த்த அரங்கு வைபவம் | கைரோ எகிப்து | ஒக் 10-21 | 15 |
| இலங்கை இரவு | பாங்கொக் | நவம் 20 | 14 |
| சமாதானத்திற்கான இசை – 16 வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் ஆரம் வைபவ கலைநிகழ்ச்சி | சீனா | நவம் 04-11 | 03 |
| குஷி விருது வழங்கல் வைபவம் | பிலிப்பைன்ஸ் | நவம் 24 | தீர்மானிக்கப் படவில்லை |
| SCO மன்றத்தின் கலாசார கைத்தொழில் ஒத்துழைப்பு | சீனா | நவம் 22 - 27 | 02 |
| வேல்ட் மாஸ்டர்ஸ் போட்டி 2010 | கொரியா | திசம் 03 - 05 | 10 |

## 1.4. உத்தேச நிகழ்ச்சித் திட்டங்கள் - 2011

**வருடாந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக 2011 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள உத்தேச கருத்திட்டங்களும் நிகழ்ச்சித் திட்டங்களும்**

### 1.4.1. கொழும்பு நேமேட்ஸ் மைதானத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற தேசிய அரங்காற்றல் கலை நாடக அரங்கை திறந்துவைத்தல்

கொழும்பு 7 நேமேட்ஸ் மைதானத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற அரங்காற்றல் கலை அரங்கம் 2011 ஆம் வருடத்தின் ஆரம்ப பகுதியில் பொதுமக்களுக்காக வைபவரீதியாக திறந்து வைப்பதற்கு அமைச்சு திட்டமிட்டுள்ளது. இந்த அரங்கம் அமைச்சினால் நிருவகிக்கப்படுகின்ற சுயாதீனமான நிறுவனமொன்றாக தாபிப்பதற்கு தேவையான சட்டமூலத்தை தயாரிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 1.4.2. அமைச்சில் உள்ள இணையத் தளத்தை விருத்தி செய்தல்.

தேசிய பாரம்பரியங்கள், கலைப் படைப்பகள், இலக்கிய மற்றும் இலங்கை மக்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த பெறுமானங்கள், மதிப்பீடுகள் பழக்க வழக்கங்கள், மத அனுஷ்டானங்கள் உள்ளிட்ட இலங்கை கலாசாரம் பற்றிய தகவல்களை உலகின் எந்தவொரு பகுதிலும் வாழ்கின்ற எந்தவொரு நபருக்கும் உடனடியாக பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் தற்போது அமைச்சில் பேணப்பட்டு வருகின்ற இணையத் தளத்தை விருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி ஒளி, ஒலி வசதிகளை (ஒடியோ வீடியோ அரங்கம்) அறிமுகப்படுத்தவும் சுற்றுப் பயணிகளுக்கு பயன்மிக்க தொல்பொருள்சார் இடங்கள் 100 பற்றிய தகவல்கள் உள்ளிட்ட தேசிய பாரம்பரியங்களையும் கலாசார செயற்பாடுகளையும் பற்றிய தகவல்களை இணையத்தளத்தில் இடுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. கலாசார அலுவல்கள் திணைக்களம்

**நோக்கு**

இலங்கை மக்களை ஆன்மீக ரீதியாக விருத்தியடைந்த, உணர்வுபூர்வமான மனிதர்களாக மாற்றுகின்ற ஒருமுகமான அபிலாஷையை நிறைவேற்றும் வகையில் இலங்கையின் கலாசாரத்தை கட்டியெழுப்புதல்

**பணி**

இலங்கையின் தனித்துவமான கலை, இலக்கிய மற்றும் கலாசார அலுவல்களை பேணிப்பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் பரப்புதல் என்பவற்றிற்கான நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தலும் அமுல்படுத்துதலும்.

**நோக்கங்கள்**


- இலங்கையின் கலாசார அலுவல்களை வினைத்திறன்மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்தலும் அமுல்படுத்துதலும்.
- இலங்கையின் கலை, இலக்கியங்களை பேணிப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் பரப்புதல் என்பவற்றோடு தொடர்புடைய கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- இலங்கையின் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களை கலாசாரத்தின் அங்கத்தவர்களாக கருதி அவர்களுக்கு உதவிகளைப் பெற்றுக்கொடுத்தலும் படைப்பாற்றலுக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குதலும்.
- இலங்கையின் மொழி, இலக்கியம் மற்றும் வரலாறு என்பவற்றை கலாசாரத்தின் அடிப்படையாக கருதி கலைக்களஞ்சியங்கள், அகராதிகள் மற்றும் மகாவம்சம் என்பவற்றை தொகுத்தலும் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்காக புத்தகங்களை வெளியிடுதல், புத்தகங்களை கொள்வனவு செய்தல், பிரதி எழுதுதல் போட்டிகளை நடாத்துதல், அரிய புத்தகங்களை மீளப்பதிப்பித்தல் என்பவற்றுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்து, அமுல்படுத்துதல்.
- இலங்கையை பல்கலாசார நாடாக கருதி, அனைத்து துணை கலாசாரங்களுக்கும் நியாயமான விதத்தில் அவர்களது கலைகள் மற்றும் கலைநுட்பங்களை பேணிப்பாதுகாத்து, மேம்படுத்தி மற்றும் பரப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.
- இலங்கையில் கட்லபுனாக மற்றும் கட்புலனான கலாசார அம்சங்களுக்கு புத்துயிரளித்து, அவற்றை சமூகத்தின் அனைத்து தரப்பினரையும் சென்றடையும் வகையில் நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்து, அமுல்படுத்துவதன் மூலம் விழுமியங்கள் நிறைந்த சமுதாயமொன்றை கட்டியெழுப்புதல்.

## 2.1. 2010 ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடும் 2010.09.30 இற்கான நிதிசார் முன்னேற்ற அறிக்கையும் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியும்

| | நிகழ்ச்சித்திட்டம் | 2010 க்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.மீ | 2010.09.30 திகதிக்கான நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | பொது நிருவாகம் | 53.422 | 37.061 |
| | வெளியீட்டு மற்றும் இலக்கிய விடயங்கள் | 34.782 | 22.747 |
| | கலை மற்றும் படைப்பாற்றல் அபிவிருத்தி | 140.376 | 91.298 |
| | **சேர்க்கப்பட்ட தொகை** | **228.58** | **151.106** |
| மூலதனம் | பொது நிருவாகம் | 5.200 | 1.700 |
| | வெளியீட்டு மற்றும் இலக்கிய விடயங்கள் | 0.200 | 0.011 |
| | கலை மற்றும் நிபுணத் படைப்பாற்றல அபிவிருத்தி | 56.010 | 10.351 |
| | **சேர்க்கப்பட்ட தொகை** | **61.410** | **12.062** |
| | முழுத் தொகை | 289.98 | 163.168 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




| | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி | |
|---|---|---|---|
| பதவிநிலை | - 89 | 20 | ★ வெற்றிடங்கள் |
| பதவிநிலைசாராத | - 460 | 354 | காணப்பட்ட சகல |
| கனிஷ்ட | - 155 | 65 | பதவிகளையும் நிரப்பும் |

## 2.2 செயலாற்றுகை 2010

**2.2.1 கலைசார் அலுவல்களை மேம்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

### 2.2.1.1. சரஸ்வதி ஓய்வூதிய முறைமை

சமூக மற்றும் சமூக நலனோம்புகை அமைச்சு, கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து 2008.08.11 ஆந் திகதியன்று ஆரம்பித்த புதியதொரு கருத்திட்டமே இதுவாகும். புனித தலதா பெரஹரையின் இறுதியில் அதிமேதகு சனாதிபதியினால் இத்திட்டத்தின் முதலாவது ஓய்வூதியதாரார் கலைஞர்கள் 05 பேருக்கு ஓய்வூதிய பத்திரங்கள் வழங்கப்பட்டன. **2010 ஆம் ஆண்டில் 85 கலைஞர்களுக்காக ரூபா 2,314,184.00 தொகை தவணை நிதி வழங்கப்பட்டுள்ளது.**

### 2.2.1.2 கலைதேவி காப்புறுதித் திட்டம்.

2010 ஆம் ஆண்டில் 13 கலைஞர்களுக்கு ரூபா 11700.00 தொகை தவணை நிதி செலுத்தப்பட்டுள்ளது.

### 2.2.1.3 கலைஞர்கள் காப்புறுதித் திட்டம்.

கலைத்துறைகக்காக மிகவும் சிறந்த சேவைகளை செய்த கலைஞர்களின் எதிர்காலத்தை பாதுகாக்கும் நோக்குடன் இந்த காப்புறுதித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இங்கு காப்புறுதிக்காக 60 வீத பங்களிப்பு நிதி கலாசார அலுவல்கள் திணைக்களத்திடமிருந்தும் 40 வீத பங்களிப்பு நிதி கலைஞர்களிடமிருந்தும் அறவிடப்படுகின்றது. 07 கலைஞர்கள் இதன் கீழ் காப்புறுதியை பெறுவதோடு **2010 ஆம் ஆண்டில் ரூபா 14,677 தொகை தவணை நிதி செலுத்தப்பட்டுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.2.1.4 கலாபூசண விருது வழங்கல் வைபவம்

தமது காலம், செல்வம் மற்றும் ஊழியம் என்பவற்றை அர்ப்பணித்து பல்வேறு கலாசார அம்சங்களை பாதுகாப்பதற்காக முன்னோடிகளாக செயற்பட்ட ஆனால் உரியமுறையில் மதிக்கப்படாத கலைஞர்களை கௌரவிப்பதற்காக இந்த விருது வழங்கும் வைபவம் 1984 இல் மாண்புமிகு பிரதமரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் கலைஞர்களுக்கு 05 பொற் பதக்கங்களுடன் தலா ரூபா 5000/- நிலையான வைப்பு 48 விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டன. இங்கிருந்து ஆரம்பித்து ஒவ்வொரு வருடமும் விருது பெறுகின்ற கலைஞர்களின் எண்ணிக்கையை அதிகரித்து வெள்ளிப் பதக்கங்களுடன் தலா ரூபா 10,000 தொகை நிலையான வைப்பொன்றுடன் கலாபூசணம் சான்றிதழ் ஒன்றும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. இந்த கலைஞர்களை கௌரவிப்பதற்காக ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 15 ஆந் திகதி கலைஞர்கள் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. **2010 ஆம் ஆண்டில் திசெம்பர் 15 திகதிய வைபவம் மற்றும் விருது வழங்கல் வைபவத்தை நடத்துவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

### 2.2.1.5 தேசிய கலைஞர்களை பட்டியலை வெளியிடுதல்

இலங்கையில் தேசிய மட்டத்தில் அனைத்து துறைகளிலும் உள்ள கலைஞர்களின் தகவல்கள் அடங்கிய புத்தகமொன்றாக இது வெளியிடப்படுகின்றது. 2009 ஆம் ஆண்டின் இறுதியளவில் அனைத்து துறைகளிலுமுள்ள 1080 கலைஞர்களின் தகவல்கள் கிடைக்கப் பெற்றிருந்ததோடு தெரிவுசெய்த தகவல்களை பாதுகாத்தல் மற்றும் தேவையான சட்டகத்தை தயாரித்தல் என்பன 2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. 2010 செப்தெம்பர் அளவில் தேசிய கலைஞர்கள் பெயர்ப் பட்டியலை அச்சிடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

### 2.2.1.6 தேசிய கலைஞர்கள் நம்பிக்கையை ஸ்திரப்படுத்துதல்

கலைஞர்களுக்கு தமது படைப்புகளை உருவாக்குவதில் நிதி உதவியை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் தேசிய கலைஞர்கள் நம்பிக்கை பொறுப்பு 2007.06.12 திகதியன்று ஜப்பானிய வெளிநாட்டு நிதி உதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. இதன் கீழ் முதலாவதாக 2008.12.15 திகதி கலைஞர்கள் கொடி தினம் இடம்பெற்றதோடு அன்று முதல் ஒவ்வொரு திசம்பர் 15 திகதியும் வருகின்ற கலைஞர்கள் தினத்தோடு இணைந்ததாக கலைஞர்கள் கொடி தினம் பிரதேச செயலகங்களின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டு இந்த தேசிய நம்பிக்கை பொறுப்பிற்கு நிதி வைப்பிலிடப்படுகின்றது. **2010 ஆம் ஆண்டில் ரூபா 415,000.00 தொகை கொடி வருமானமாக கிடைக்கப்பெற்றது.**

### 2.2.1.7 வளமற்ற கலைஞர்கள் உதவுதொகை

வயதுமுதிர்ந்த வளமற்ற கலைஞர்களது அந்திம காலத்தில் கைகொடுப்பதற்கான நோக்கில் இந்த கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இதன் கீழ் 60 வயதைக் கடந்த இளைப்பாறாத பல்வேறுபட்ட கலைத்துறைகளில் ஈடுபட்டுள்ள நாடளாவிய ரீதியிலுள்ள கலைஞர்களுக்காக பிரதேச செயலக மட்டத்தில் விண்ணப்பங்கள் கோரி, வருடத்திற்கு ஒருமுறை ரூபா 3000 தொகையொன்று வழங்கப்படுகின்றது. **2010 வருடத்தில் நிதி உதவியாக 982 கலைஞர்களுக்கு ரூபா 2,933,400.00 தொகையொன்று வழங்கப்பட்டுள்ளது.**

### 2.2.1.8. கலை மன்ற உதவு தொகை

திணைக்களத்தில் பதிவு செய்துள்ள செயற்துடிப்புமிக்க கலைஞர்களுக்கு குறிப்பிட்ட பிரதேச செயலாளரின் சிபாரிசுடன் ஒவ்வொரு வருடமும் ஆய்வு அறிக்கையை சமர்ப்பிப்பதனூடாக இந்த உதவு தொகையை பெற்றுக்கொள்ள முடியும். கலை மன்றங்களை பதிவுசெய்து ஒரு வருடம் சென்றதன் பின்னர் ரூபா 1500 வும் சாதரண தர கலை மன்றத்திற்கு ரூபா 3500 வும் விசேட கலை மன்றத்திற்கு ரூபா 6000 தொகையொன்றையும் நிதி உதவியாக பெறமுடியும். **2010 ஆம் ஆண்டில் 856 கலை மன்றங்களுக்காக ரூபா 2,972,500.00 தொகையொன்று வழங்கப்பட்டுள்ளது.**

### 2.2.1.9. கலைஞர்களுக்கான மருத்துவ மற்றும் மரண நிதி உதவி

எட்டு கலைஞர்களுக்கான மருத்துவ நிதி உதவியாக ரூபா 65,000 உம் 25 கலைஞர்களின் இறுதிக் கிரியைகளுக்கான செலவாக ரூபா 599,215 தொகை நிதியுதவிகளும் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2.2.1.10. பல்வேறுபட்ட வைபவ உதவிகள்**

**2010 ஆண்டில் 49 பல்வேறுபட்ட வைபவங்களுக்காக ரூபா 449,452 தொகை செலுத்தப்பட்டுள்ளது**

**2.2.1.11. பெரஹர உதவி**

வருடம் முழுவதும் நாட்டின் பல்வேறு விகாரைகளையும் அண்டியதாக இடம்பெற்ற 44 பெரஹறைகளுக்காக நிதி உதவி பெற்றுக்கொடுக்கின்ற கருத்திட்டத்தினால் இது மேற்கொள்ளப்பட்டது. **2010 ஆண்டில் 30 பெரஹர நிகழ்வுகளுக்காக ரூபா 213500.00 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது**

**2.2.1.12. கலா மன்றங்களை பதிவுசெய்தல்**

தேசிய மரபுரிமைகள் தொடர்பில் பாடசாலை மாணவ, மாணவிகளின் அறிவையும் மனப்பாங்கினையும் மேம்படுத்தும் நோக்கில் தேசிய நூதனசாலையை பயனுள்ளவகையில் பார்வையிடும் வகையில் ஆர்வமூட்டும் நோக்கில் இலங்கையிலுள்ள அனைத்துப் பாடசாலை மாணவ மாணவிகளும் பங்குபற்றும் வகையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் "மரபுரிமைகள்" தொடர்பாக கேள்விபதில் போட்டி நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டன. இப்போட்டி நிகழ்ச்சிகள் 2010 சனவரி 01 ஆம் திகதி முதல் ஓகத்து 31 வரை நடைபெற்றதுடன் கேள்விகள் தொடர்பான விடயங்கள் சிங்களம் மற்றும் தமிழ் "விஜய்" பத்திரிகையிலும் Funday Times ஆங்கில இணைப்புச் சஞ்சிகையிலும் வெளியிடப்பட்டன. 244 **பேர் இதற்கான பதில்களை அனுப்பியிருப்பதுடன் வெற்றிபெற்றவர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் சான்றிதழ்களும் கலந்துகொண்ட மாணவ மாணவிகளுக்கு சான்றிதல்களும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

**4.2.3. கல்விசார் நிலையங்கள் மற்றும் மதஸ்தானங்களை மையமாகக் கொண்டு இலங்கை கலாசார மரபுரிமைகள் மற்றும் இயற்கை மரபுரிமைகள் தொடர்பான அறிவை விரிவாக்கும் நோக்கில் நடாத்தப்பட்ட நடமாடும் நூதனசாலை கண்காட்சிகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.**

| விடயம் / பிரிவு | இடம் | கண்காட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவு | | 12 |
| **இலங்கையில் சித்திரக் கலையும் சப்ரமுவ மரபுரிமைகளும்** | இரத்தினபுரி நூதனசாலை | 02 |
| புவியியல் பிரிவு - **இலங்கையில் கனிய வளங்கள்** | | 03 |
| புவியியல் பிரிவு - சந்திரவட்டக்கல் | கட்டான வலிசிங்ஹ ஹரிஷ்சந்திர நூதனசாலை | 01 |
| நச்சுத்தன்மையுள்ள மரங்கள் கண்காட்சி | தல்துவ மஹா வித்தியாலய, பிலிகுத்துவ சரக கல்விநிலையம், நீர்கொழும்பு கிறிஸ்தவ சங்கத்தின் மண்டபம் | 03 |
| மானிடவியல் பிரிவு - **இலங்கையில் கோளாட்ட சம்பிரதாயம்** | புாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழங்களில் | 05 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.2.4. சர்வதேச நூதனசாலை தினத்தைக் கொண்டாடுதல

2010 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள்




தேசிய நூதனசாலைப் பணிப்பாளர் சர்வதேச நூதனசாலை தினத்தைக் கொண்டாடுவதற்காக வாகரை மகா வித்தியாலயத்திற்குச் சென்றபோது

வருடாந்தம் மே மாதம் 18 ஆம் திகதி விசேட கருப்பொருளின் கீழ் சர்வதேச நூதனசாலைகள் தினம் கொண்டாடப்படுகின்றது.2010 ஆம் ஆண்டில் சர்வதேச நூதனசாலைகள் தினத்தின் கருப்பொருளாக " சமூக சகவாழ்வுக்காக நூதனசாலைகள்" என்ற கருத்தில் சர்வதேச நூதனசாலைகள் தினத்தை, நூதனசாலைகள் திணைக்களம், வாகரை மத்திய மகா வித்தியாலத்தில் கொண்டாடியது. அங்கு கணிசமான கல்விசார் நிகழ்ச்சிகள் மற்றும் நடமாடும் கண்காட்சியும் வாகரை பிரதேச சிறார்களுக்காக நடாத்தப்பட்டன

### 4.2.5. நூதனசாலையில் புதிதாக சேர்க்கப்பட்ட அருங்காட்சிப் பொருள்கள்

#### 4.2.5.1. கலாசாரப் பிரிவிற்குரிய பொருள்கள்

- இலங்கை திலக ரஜ மஹா விகாரையினை பிரதிசெய்யப்பட்ட சித்திரம் (தற்போது கொழும்பு நூதனசாலையின் சித்திர கூடத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது )
- சிற்ப வேலைப்பாடுகளுடன் வெள்ளியில் முடிவுறுத்தப்பட்ட சுண்ணாம்பு (காலி தேசிய நூதனசாலையின் கண்காட்சிக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.)



பிளிமத்தலாவ லங்கா திலக ரஜ மகா விகாரையில் காணப்பட்ட மிகவும் பழமைவாய்ந்த பெறுமதிமிக்க சித்திரம்



வெள்ளியால் செய்யப்பட்ட சுண்ணாம்பு இடும் பாத்திரம்

- செனட் சபையினால் கையாளப்பட்ட கண்ணாடிப் பொருள்கள் 72 யினை மனித பரிணாம வளர்ச்சி விஞ்ஞாபன பிரிவிற்கு பெற்றுக்கொள்ளல் ( பிரித்தானிய காலத்தில் செனட் சபையின் போது பாவித்த செனட் சபையில் முடிவில் பயன்படுத்தப்பட்ட இவ் மொத்தம் நூதனத்தின் பெறுமதியுடன் சேர்ந்தது)
- நூதன மற்றும் பட்டபின் நூதன பாரம்பரியத்திற்கு உரித்தான ஆடைகளின் ஒன்றிணைத்த தியாகமாக கிடைத்துள்ளது. (ஆராய்ச்சிக்காக மிகவும் முக்கியமாகும்.)
- விவசாய நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் பலகையிலான 30 புராதனப் பொருள்கள் மானிடவியல் பிரிவிற்கு பெறப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4.2.5.2 விஞ்ஞானப் பிரிவிற்குரிய அருங்காட்சிப் பொருள் 10,035 வகைகளில் மிருகங்களின் உறுப்புகள் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகவும் காட்சிப்படுத்தலுக்காவும் பெறப்பட்டவை**

- நுண்ணங்கிகள்
- யானைத் தந்தத்தினால் செய்யப்பட்ட முத்துகள் 19 ( செயற்கையான ),யானைத் தந்தத்தின் பகுதிகள் 06
- வனவியல் மரபுரிமைகளிலிருந்து பெற்றுக்கொண்ட உயிரினங்கள் 10,000
- மீன்கள் 04

**4.2.5.3. வாசிகசாலைக்காக 14 புத்தகங்கள், 02 ஏட்டோலைகள் மற்றும் 40 கையேடுகள் என்பன பரிசுப்பொருள்களாக கிடைக்கப்பெற்றுள்ளன.**

## 4.2.6. வழிகாட்டல் சேவைகள்

- கொழும்பு தேசிய நூதனசாலை, வெளிநாட்டு தூதுக் குழுவினருக்கு 45 வழிகாட்டல் சேவைகளை வழங்கியது
- பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய நிலையங்களுக்கு வழிகாட்டல் சேவைகளை வழங்குதல்.

## 4.2.7. ஆராய்ச்சிக் கட்டுரைகளை முன்வைத்தல்

- இலங்கையில் கிடைக்கப்பெற்ற இந்தியாவில் தயாரிக்கப்பட்ட புராதன நாணயங்கள் தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரை, உலக சம்பவங்களிடையே தமிழுக்கான நட்பு பாராட்டலை மாநாட்டிற்காக சமர்ப்பித்தல்.
- இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்குமிடையிலான வர்த்தகத் தொடர்புகள் நாணயம் உலோக இயல் விஞ்ஞாபனம் தொடர்பாக ஆராய்ச்சிக் கட்டுரையினை தென்னாசிய தொல்பொருள் மாநாட்டிற்காக சமர்ப்பித்தல்.
- இலங்கையில் கிடைக்கப்பெற்ற புராதன நாணயங்கள் தொடர்பான ஆய்வுக் கட்டுரையினை தொல்பொருள் மாநாட்டிற்கு முன்வைத்தல்

## 4.2. 8 தேசிய நூதனசாலையினை மேம்படுத்துவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள்

| செயற்பாடுகள் | இடம்/ மேற்கொண்ட நடவடிக்கைகள் |
|---|---|
| கட்டிடத்தினை புனரமைத்தலும் மேம்படுத்தலும் | கொழும்பு தேசிய நூதனசாலையின் புராதன சித்திர கூடத்தினை நவீனமயப்படுத்தல் |
| | அனுராதபுர மானிட நூதனசாலைக் கூடத்தினை புனரமைத்தலும் மேம்படுத்தலும். |
| | விலங்கியல் பிரிவின் இருமாடி கட்டிடத்தினை புனரமைத்தல். இதுவரை 50மூ வேலைகள் முடிவுற்றுள்ளன. |
| | கொழும்பு நூதனசாலையின் சுற்றுச்சூழல் பூந்தோட்டத்தை மேம்படுத்தல் |
| நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தல் | தேசிய நூதனசாலையின் வெப்தளத்தை மீளமைத்தல் |
| | மானிடவியல், மனித பரிணாமவளர்ச்சி விஞ்ஞாபனம் தாவரவியல், நுண்ணுயிரியல், விலங்கியல் பிரிவுகளுக்குரிய பொருள்களை சேர்த்துக் கொள்வது தொடர்பில் விளக்கமான வகைப்படுத்தலை மேற்கொள்வதுடன் அப்பொருள்கள் அனைத்தையும் கணினிமயப்படுத்தல். |
| | நூதனசாலை வாசிகசாலையிலின் புத்தகங்களைக் கையாள்கின்ற வாசகர்களின் வசதி கருதி 14396 புத்தகங்களை கணினிமயப்படுத்தல். |
| | புராதன ஏட்டோலைப் புத்தகத் தொகுதிகளை டிஜிடல் தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி பாதுகாப்பதுடன் புத்தக ஏடுகளை தொடர்ந்தும் பேணிப் பாதுகாத்து வருதல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| செயற்பாடுகள் | இடம் / மேற்கொண்ட நடவடிக்கைகள் |
| --- | --- |
| பார்வையிடுபவர்களது வசதியும அறிவை மேம்படுத்தலும் | விலங்கயில் பிரிவு மூலம் ராகம பிரதேசத்தில் பெற்றுக் கொண்ட முதலை மாதிரிகள் மற்றும் உக்குடுவா விலங்கு மாதிரிகள்03, பட்சிகள் மாதிரிகள் 02 ஐ அமைத்தல். |
| | ஆனைத்து வசதிகளையும் கொண்ட முழுமையான உணவு விடுதிக் கட்டிடத்தின் நிருமாண வேலையின் 99% முடிவுற்றுள்ளது. |
| | நூதனசாலையிலுள்ள அருங்காட்சிப் பொருள்கள் மற்றும் மாதிரிப் பொருள்கள் தொடர்பான அறிவை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக ஓடியோ ஊடகத்தினை பயன்படுத்துகின்ற செயற்திட்டத்தினை துரிதப்படுத்தி நூதனசாலைகள் வலையைமப்பு மேற்கொள்கின்ற சேவைகள் மற்றும் தேசிய அபிவிருத்திக்கு நூதனசாலைகளின் பங்களிப்பு போன்ற தலைப்புகளில் திவயின புதன்கிழமை சஞ்சிகையில் கட்டுரைகள் வெளியிடல். |

**கொழும்பு தேசிய நூதனசாலையின் முழு வசதிகளுடன்கூடிய உணவுவிடுதி**

தேசிய மற்றும் வெளிநாட்டு பார்வையாளர்களுக்காக பொருத்தமானதன் படி உட்கட்டமைப்பு வசதிகளை அமைத்தல




**இதுவரையில் 99% வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு நில செம்மைப்படுத்தல் நடவடிக்ஐ மேற்கொள்ளப்பட்டவண்ணம் உள்ளது.. 2011 ஆண்டு முதல் பருவத்திற்குள் பொதுமக்களுக்காக திறந்து வைப்பதற்குள்ளது.**

### 4.2.8. 2010 ஆம் ஆண்டில் மேற்கொண்ட வெளியீடுகள்

### 4.2.8.1.2010 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட புத்தகங்கள்

- ஸ்போலியா செலனிகா 44 ஆவது தொகுப்பு ஆய்வு நூல்
- ஓலந்த நூதனசாலையின் தமிழ் கையேடு
- காலி சமுத்ர நூதனசாலையின் தமிழ் கையேடு
- காலி சமுத்ர நூதனசாலையின் ஆங்கில கையேடு
- Traditional Textiles in the Colombo National Museums



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4.2.8.2. அச்சிடலுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ள புத்தகங்கள்**

- கொழும்பு நூதனசாலை வாசிகசாலையின் ஏட்டோலைப் புத்தகங்கள் தொடர்பான விபரங்களடங்கிய புத்தகப் பட்டியல்
- நூதனசாலை 15 வலயங்கள்
- இலங்கை நாணயங்கள்
- ஸ்பொலியா ஸெலனிகா 45 ஆராய்ச்சி அளவுகள்
- கொழும்பு மற்றும் பிரதேச நூதனசாலைகளின் 8 கையேடுகளை சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் அச்சிடல்.

**4.2.8.3 விலைமனு கோரப்பட்டுள்ள புத்தகங்கள்**

- மத்திய கால சிங்கள கலை
- கொழும்பு நூதனசாலையின் அருங்காட்சிப் பொருள்கள்
- நூதனசாலையிலுள்ள அருங்காட்சிப் பொருள்கள் மற்றும் மாதிரிகள் தொடர்பாக ஓடியொ ஊடகத்தினூடாக பொது மக்கள் முன் கொண்டு செல்வதற்கான செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்காக நூதனசாலை வலையமைப்பினூடாக மேற்கொள்ளும் பணி மற்றும் தேசிய அபிவிருத்திக்கு நூதனசாலைகள் மேற்கொள்கின்ற பணி போன்ற தலைப்புகளில் திவயின புதன்கிழமை சஞ்சிகையில் கட்டுரைகளை வெளியிடல்.

**4.2.9**

**நூதனசாயையினை பார்வையிட வந்தவர்கள**





| வருடம் | பாடசாலை | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|---|
| 2006 | 13,645 | 72,087 | 101,208 |
| 2007 | 6,430 | 119,043 | 87,746 |
| 2008 | 28,268 | 98,526 | 7,353 |
| 2009 | 206,069 | 173,740 | 9,787 |
| 2010 ஆகஸ்ட் 31 வரை | 180,909 | 117,481 | 13,458 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.2.10.




## 4.3 நான்காவது கால்பகுதியில் மேற்கொள்ளவுள்ள நிகழ்ச்சிகள்

**சாஸ்திரயம்**

- மனித பரிமாண வளர்ச்சி விஞ்ஞாபன பிரிவு இலங்கையிலுள்ள நூதனசாலைகளிலுள்ள ஆய்வினை மேற்கொள்ளல்.
- புவியியல் கண்காட்சிக் கூடத்தினை நவீனமயப்படுத்துவதற்கு தேவைப்படுகின்ற கண்காட்சி அட்டைகள் மற்றும் மாதிரிப் பொருள்கள் தொடர்பான தகவல்களை ஒன்றுதிரட்டி தயாரித்தல்.

**கல்விசார் விரிவுரைகள், நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் வேலைக்களங்கள்**

- 2010 ஆம் ஆண்டின் "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சிக்காக நடாத்தப்பட்ட கருத்தரங்கில் ஒவ்வொரு பிரிவும் விரிவுரை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- 2010 ஆம் ஆண்டின் "தேசத்திற்கு மகுடம்" தேசிய கண்காட்சிக்காக மொனராகலை, பிபிளை, வெல்லவாய போன்ற கல்வி வலயங்களில் நடமாடும் நூதனசாலைக் கண்காட்சிகள் 03 நடாத்தப்பட்டன.
- சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டான கண்காட்சிக்கிற்காக நுண்ணுயிர் விஞ்ஞான/ விலங்கியல் விஞ்ஞானப் பிரிவினால் 10 காட்சிப் பொருள்கள் செய்யப்பட்டன.
- இயற்கை விஞ்ஞான நூதனசாலை, தேசிய தொழிநுட்ப மரபுரிமைகள் கூடம் மற்றும் முடிக்கப்பட்டவைகளை கண்காட்சிக்கு திறந்து வைத்தல்.

**கட்டிடங்கள் புனரமைப்புச் செய்தலும் மேம்படுத்தலும்**

- விலங்கியல் விஞ்ஞானப் பிரிவின் கட்டிடங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டன.
- விவசாயக் கண்காட்சியினை நடாத்துவதற்காக கட்டிட புனரமைப்புக்கான வேலையையை வழங்கல்
- காலி நூதனசாலை கூரையினை புனரமைப்புச் செய்தல்
- இயற்கை விஞ்ஞான நூதனசாலையின் மின்சார இணைப்பு முறைமையினை புனரமைப்புச் செய்தல்
- கொழும்பு நூதனசாலை இலத்திரனியல் குறியீட்டு முறைமையினை புனரமைப்புச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.4. 2011 ஆண்டில் மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் - 2011

**தேசிய நூதனசாலைக்கு புதிய கூடங்களை அதிகரிப்பதுடன் புனரமைப்புச் செய்தலும்**

- கொழும்பு தேசிய நூதனசாலையின் விவசாய கூடங்களை நவீனமயப்படுத்தல்.
- கொழும்பு தேசிய நூதனசாலைக்கு பிடவைகளுக்கான கூடமொன்றை அமைத்தல்.
- இயற்கை விஞ்ஞான நூதனசாலையில் புவியியல் கூடங்கள் மற்றும் கலங்களுக்கான கூடங்களையும் அமைத்தல்

**சாஸ்திரிய விஞ்ஞாபணம்**

- மனித பரிணாம வளர்ச்சி விஞ்ஞாபன பிரிவு மூலம் தேசிய நாணயங்களை சேர்த்தல் கற்று அறிதலும் வகைப்படுத்தலும்.
- நுண்ணுங்கிகள் விஞ்ஞாபன பிரிவு மூலம் Order Lepidoptera சேர்த்து ஆவணப்படுத்தல்
- Cerambicidae குலத்திற்கு ஏற்றவாறு பரவலாக்கல் மாதிரியொன்றை சேர்த்தலும் ஆராய்ச்சியை மேற்கொள்ளல்.
- முானிடவியல் பிரிவிற்குரிய மாட்டுவண்டி மற்றும் விவசாய உபகரணங்கள் அனைத்தையும் பாதுகாத்தல்.
- புராண புத்தகங்கள் 30 மற்றும் ஏட்டோலைகள் 20 என்பவற்றைப் பாதுகாத்தல்.
- நூதனசாலைப் புத்தகசாலையில் காணப்படுகின்ற புத்தகங்களை கணினிமயப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தினை துரிதப்படுத்தி வினைத்திறனுடன் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல்.

**கல்விசார் விரிவுரைகள், செயற்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் வேலைக்களங்கள்**

- நூதனசாலையிலுள்ள அருங்காட்சிப் பொருள்கள் மற்றும் மாதிரிப் பொருள்கள் தொடர்பான அறிவை மக்கள் மத்தியில் ஏற்படுத்த ஒலியுணர் ஊடகத்தினூடான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுத்தல்
- இலங்கையின் கலாசார மற்றும் இயற்கை மரபுரிமைகள் தொடர்பாக மாணவ மாணவிகள், ஆசிரிய ஆசிரியைகள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவூட்டலை ஏற்படுத்தும் நோக்கில் விசேட கல்விசார் நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகள் நடாத்துதல்.
- 10, 11 தர பாடசாலை மாணவ மாணவிகளின் பாடத்திட்டத்திற்கிணங்க இலங்கை வரலாறு மற்றும் கலை தொடர்பான கல்விசார் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல்.
- பாடசாலைகள், மத நிலையங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் வேண்டுகோளுக்கிணங்க நடமாடும் கண்காட்சியை நடாத்த ஒழுங்கு செய்தல்.
- தேசத்திற்கு மகுடம் சூட்டுவோம், தேசிய இலக்கிய கலை விழாவிற்கு சமமாக மேற்கொள்வதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தல்.
- இரத்தினபுரி நூதனசாலை, கல்வித் திணைக்களத்துடன் இணைந்து பாடசாலை மாணவ மாணவிகளுக்கு கட்டுரை அல்லது சித்திரப் போட்டியினை நடாத்தல்
- 2011 சர்வதேச நூதனசாலை தினம் மற்றும் இரத்தினபுரி தேசிய நூதனசாலையின் 65 வருடப் பூர்த்தியை முன்னிட்டு வைபவமொன்றை ஒழுங்கு செய்தல்
- சப்ரகமுவ நடனம், அங்கப்பொர, சப்ரகமுவ பலி தொவில் சாந்தி முறை தொடர்பாக இரத்தினபுரி நூதனசாலை நிகழ்ச்சியொன்றை நடாத்துதல்.

**கட்டடங்கள் புனர்நிர்மாணமும் மேம்படுத்தல் நடவடிக்கைகளும்**

- தேசிய நூதனசாலையில் இருக்கின்ற தேசிய மரபுரிமைகளை வெளிப்படுத்துகின்ற நூதன பொருள் மாதிரிகள், சஞ்சிகைகள், பரிசுப்பொருள்கள் மற்றும் வெளியீடுகளை விற்பனை செய்யும் நிலையங்கள் உள்ளிட்ட உள்நாட்டு , வெளிநாட்டு பார்வையாளர்களுக்கு அனைத்து வசதிகளையும் கொண்ட முழுமையான உணவகமொன்றை மக்களுக்காக அமைத்தல்.
- கொழும்பு தேசிய நூதனசாலை கட்டிடத்தினை புனர்நிருமாணம் செய்தல்.
- அலுவலக கட்டிடம் மற்றும் பிரதேச நூதனசாலை கட்டிடங்களை புனர்நிருமாணம் செய்தல்.
- இரத்தினபுரி நூதனசாலையை புனர்நிருமாணம் செய்தல்.
- கொழும்பு நூதனசாலைச் சூழவுள்ள பூந் தோட்டத்தை மேம்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05. தேசிய சுவடிக்கூடத் திணைக்கள

**நோக்கு**

தேசிய எழுத்தப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் அதற்கு ஒப்பான நீதியும் சட்டமும் நடைமுறைப்படுத்தல். நிலையான பாதுகாப்புக்காக தேசிய தரவு மற்றும் நல்ல தனியான தரவு இணைப்பு செய்து கொள்ளல் குறிப்பிட்ட சட்டத்திற்கு ஏற்ப சம்பிரதாயமற்ற அரச தரவு முகாமைத்துவம் மற்றும் பாதுகாத்தல். குறிப்பிட்ட சட்டரீதியான சேமிப்புக்கு பத்திரிகை மற்றும் அறிவித்தலை பாவனைக்குட்படுத்தல். தேசிய நிர்வாக செயற்பாட்டின் போது மற்றும் பொதுமக்கள் ஆய்விக்காக சேமிப்பு தரவுகளின் தகவல்கள் அவதானம் செய்வதற்கு வசதிகள் செய்தல்.

**செயற்பாடு**

முறைமையான முகாமைத்துவமும் கலாசார உரிமைகள் பகுதியாக பொதுசன ஆவணங்கள் பாதுகாத்தல்.

**குறிக்கோளும் செயலும**

1978 இல் 48ஐக் கொண்ட தேசிய தரவுப் பாதுகாப்புச் சட்டமும் 1981இல் 30ஐக் கொண்ட தேசிய தரவுப் பாதுகாப்பு (சீர்திருத்தம்) சட்டத்திற்கமைய குறிக்கோளும் செயலும் கீழ்க் குறிப்பிடப்படும்.

- அரச தரவுகளின் பொறுப்பைப் பெறுவதும் அதன் பௌதீக நிலைமையைப் பாதுகாத்தல்.
- ஆய்வும் பரிசீலித்த காரியங்களுக்காக அதனை பெற்றுக் கொடுத்தல்.
- அரச திணைக்களங்களின் தரவு ஆய்வு செய்தல்.
- ஜனாதிபதி மேல் தரவு அறைகள் நிர்வாகம் செய்தலும் விமர்சிக்கும் சேவையும்
- உள்ளூர் வெளியிடும் வெளியீடுகளின் சட்டரீதியான சேமிப்பு பத்திரிகைகளுக்காக நடவடிக்கை மேற்கொள்ளல்.
- தரவு முகாமைத்துவமும் பாதுகாத்தல் சம்பந்தமாக பயிற்சிப் பட்டறை நடாத்துதல்.
- அச்சகவியலாளர்கள், அச்சகம், வெளியிடுவோர், பத்திரிகை சம்பந்தமாக திருத்தச்சட்ட மூலம் அமுல்படுத்தல்.


**5.1 2010 இற்கான ஒதுக்கீடு,**

**2010.09.30 இலான நிதியியல் முன்னேற்றம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியா**

| | நிகழ்ச்சித் திட்டம் | 2010 இற்கான ஒதுக்கீடு ரூபா மில். | 2010.09.30 இலான நிதியியல் முன்னேற்றம் |
|---|---|---|---|
| **அபிவிருத்தி வீதம்** | பொது நிர்வாகம் | 19.398 | 14.138 |
| | பதிவு முகாமைத்துவம் | 31.358 | 22.152 |
| | **உப மொத்தம்** | **50.756** | **36.29** |
| **மூலதனம்** | பொது நிர்வாகம் | 4.325 | 0.272 |
| | **பதிவு முகாமைத்துவம்** | 169.969 | 110.169 |
| | **உப மொத்தம்** | **174.294** | **110.441** |
| | **முழுத் தொகை** | **225.05** | **146.731** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




| | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி |
|---|---|---|
| பதவிநிலை | 44 | 13 |
| பதவிநிலைசாராத | 96 | 61 |
| கனிஷ்ட | 56 | 39 |

## 5.2. 2010 ஆம் வருடத்திற்கான செயலாற்றுகை

### 5.2.1 எதிர்காலத்திற்காக தேசத்தின் எழுத்துருவான மரபுரிமையினது பாதுகாப்பு

சரித்திர முக்கியத்துவமிக்க பெறுமதிமிக்க பதிவுகளின் பாதுகாப்பு, குறிக்கோளுடன் இத் தொழில்நுட்பப் பிரிவு சமய நிறுவனங்களில் பதிவுகளைப் ( ஓலைச் சுவடிகள் ) பேணிப் பாதுகாப்பதில் அதன் கடமைகளைச் செய்கிறது. இப் பாதுகாப்பு செயற்பாட்டின்போது சிதைவடைந்த பதிவுகள் ஒரு இரசாயனத் தாக்கத்தினால் அமிலமிடப்படுகின்றன. அத்தோடு இவ்வேடுகளில் காணப்படும் துளைகள் உறுதியான பொருட்களினால் மூடப்படுகின்றன.

#### 5.2.1.1. சுவடிக் கூடப் பாதுகாப்பு

தேசிய சுவடிக்கூடங்களின் பாதுகாப்பிற்கு எடுத்துச் செல்லப்படுகின்ற பதிவுகள் சுவடிகள் எனப்படும் இவை ஏறத்தாள 250 ஆவணங்ளைக் கொண்ட ஒரு தனி அலகாக வைக்கப்படுகின்றன. சுவடிகளில் 10 அலகுகள் ஏற்கனவே பாதுகாக்கப்பட்டிருக்கின்றன.



சுவடி அலகுகளினது பாதுகாப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#### 5.2.1.2. சமய தலங்களிலுள்ள பதிவுகளினது பாதுகாப்பு

எமது புராதன எழுத்து மரபுரிமை சமயத்தலங்களில் அரிதாகக் கிடைக்கின்றது. இதனது பாதகாப்பினை உறுதிப்படுத்து முகமாக 22 புனிதத்தலங்களில் வைக்கப்பட்டிருந்த பதிவுகள் பாதுகாக்கப்படுத்தப்பட்டுள்ளதோடு ஓலைச் சுவடிகளும் ஏனைய பதிவுகளுடன் பாதுகாக்கப்பட்டுள்ளன.

ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு



**ஓலைச் சுவடிகளும் பதிவுகளும் பாதுகாக்கப்பட்டிருக்கின்ற புனித தலங்கள**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ பூர்வராம போதிகர குகைக்கோவில் | ஓப்பநாயக்க |
| 2. ஸ்ரீ சுதர்மராம புரான விகாரை | கம்புறுப்பிட்டிய |
| 3. திஸ்ஸமகாராம ரஜமகா விகாரை | திஸ்ஸமகாராம |
| 4. ஸ்ரீ புண்யவர்த்தன ராமய | நாரம்மலை |
| 5. ஸ்ரீ தர்மாரத்ன பிரிவென | துல்கிரியா |
| 6. ஸ்ரீ சுகததர்மா சைத்யராமய | யக்கல |
| 7. ஸ்ரீ கானந்த பொதுகல் விகாரை | மாதெல்கமுவ |
| 8. லெனவர ரஜமகா விகாரை | அகரவிட்ட |
| 9. மிகிந்தலை ரஜமகா விகாரை | மிகிந்தலை |
| 10. பத்மாவதி பிரிவென ரஜமகா விகாரை | கினிகம |
| 11. ஸ்ரீ விஜய சுனந்தராம ரஜமகா விகாரை | தம்பதெனிய |
| 12. வெலி கொடபொல புராதன விகாரை | கத்தரலியத்த |
| 13. கந்துரல மெதிரிய ரஜமகா விகாரை | இப்பாகமுவ |
| 14. பெதிகவெல விகாரை | கலகெதர |
| 15. ரத்னசிறி கங்காராம விகாரை | பதுவட்ட |
| 16. சப்புகஸ்கந்த ரஜமகா விகாரை | மாகொல |
| 17. கணகல புரான விகாரை | உண்டுகொட |
| 18. ஸ்ரீ சூர்ய வர்த்தன விகாரை | வஹ |
| 19. ஸ்ரீ வஜிராராம விகாரை | பம்பலப்பிட்டி |
| 20. ஸ்ரீ தவலசிங்க ராமய | கொழும்பு - 15 |
| 21. நியடவனடனயரஜமகா விகாரை | மகாவ |
| 22. ஸ்ரீ சுயன்டராம விகாரை | கம்புறுகமுவ |

#### 5.2.1.3. நுண்திரைப்படப் பத்திரிகைகள்

வேறு ஊடகங்களில் அவற்றைச் சேகரிப்பதன் மூலம் கிடைக்கக்கூடிய சுவடிகளின் தகவல்களை பாதுகாக்கும் நோக்குடனும் சுவடிகளுடன் தொடர்பான பொதுமக்களுக்கான மற்றும் ஆய்வாளர்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் இலகுவழியை ஏற்படுத்துமுகமாக தெரிவு செய்யப்பட்ட பத்திரிகைகள் நுண்திரைப்படங்களாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 இன் முதல்காலாண்டு தொடக்கம் 2010 இன் 3 ஆம் காலாண்டு வரையான காலப்பகுதிகளுக்கு வெளியிடப்பட்ட பின்வரும் பத்திரிகைகள் 58,200 காட்சிகளைக் கொண்டு நுண்திரைப்படமாக்கப்பட்டுள்ளன.

- 1932.12.31 - 1933.06.30 சிலோன் டெய்லி நியூஸ்
- 1954.04.15 - 1956.02.28 டைம்ஸ் ஒவ் சிலோன்
- 2009.11.14 - 2010.07.24 தினமின
- 2009.09.31 - 2010.07.15 டெய்லி நியூஸ்

**5.2.2. பொதுசனப் பதிவுகளை ஒன்றுசேர்த்தல்**

தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் பிரதான பொறுப்பானது 25 வருடங்களைவிட பழைமையான பொதுசனப் பதிவுகள் ( 1973 ஆம் ஆண்டின் தேசிய சுவடிக்கூடச் சட்ட இல.44 இன் 9 ஆம் பிரிவின் நிபந்தனைகளுக்கிணங்க ) மற்றும் பொது நிறுவனங்களால் ( பிரிவு 13(I)இன் நியதியிற்கிணங்க ) பிரசுரிக்கப்பட்ட வெளியீடுகளையும் புத்தகங்களையும் ஒன்று சேர்த்தலாகும். பொதுசனப் பதிவுகளை ஒன்று சேர்ப்பதற்கான முறைமையின் விழிப்புணர்வை அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்படுத்தும் செயன்முறை " பதிவு ஆய்வு" எனப்படும். இச்செயன் முறையின் முதற்படி சம்பந்தப்பட்ட பொது நிறுவனத்தின் பதிவுகளை மேற்கொள்ளும் ஒரு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரை நியமித்தலாகும். ஆவணங்களைப் பாரமெடுக்கும் நோக்கத்திற்காக தேசிய சுவடிகள்கூட உத்தியோகத்தர்கள் சம்மந்தப்பட்ட அமைச்சு, திணைக்களம் அல்லது கூட்டுத்தாபனத்திற்கு வருகை தர வேண்டும். அத்தோடு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஊடாக பதிவுகளை மேற்கொள்வதற்கு அவசிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேசிய மரபுரிமை பாதுகாப்பு பொறுப்பு கடமைகளுக்கு இச் சுவடிக்கூடத் திணைக்களம் 54 அமைச்சுகளுக்கும் 54 திணைக்களங்களுக்குமாக ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களை நியமித்துள்ளதுடன் இத் திட்டம் தொடர்பான அவர்களினது விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் தனியான பதிவுகளின் விபரங்களைத் தயார் செய்வதற்கு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கின்றதோடு அத்தகைய விபரங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. ( உ+ம் ) - பாராளுமன்றம்

**5.2.3. சட்ட அடிப்படையில் ஒரு தேசிய சேகரிப்பாக நாடு பூராகவும் பிரசுரிக்கப்பட்ட சகல வெளியீடுகள் மற்றும் பத்திரிகைகளை வைப்பிலிடுதல்.**

**அச்சுப்பதிப்பக கட்டளைச் சட்டம்** : அதன்படி ஒவ்வொரு அச்சுப் பதிப்பகமும் ஒரு நீதவான் முன்னிலையில் ஒரு பிரகடனம் செய்தல் வேண்டும். அத்தோடு இப்பிரகடனத்தின் பிரதி ஒன்று பதிவிற்காக தேசிய சுவடிக்கூடத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**அச்சிடுபவர்கள் மற்றும் பிரசுரிப்பவர்கள் கட்டளைச் சட்டம்** : இச்சட்டம் தொடர்பாக ஒவ்வொரு அச்சுப் பதிப்பகமும் மேற்படி கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவை. இதன்பால் அச்சிடப்பட்ட ஒவ்வொரு வெளியீடுகளினதும் ஐந்து பிரதிகள் தேசிய சுவடிகள்கூடத்திற்கு விநியோகிக்கப்படல் வேண்டும்.

**பத்திரிகைகள் கட்டளைச் சட்டம்** : இச்சட்டத்தின் படி பத்திரிகைகள் வெளியிடுபவர்கள் மற்றும் அச்சிடுபவர்கள் மாவட்ட நீதவான் முன்னிலையில் ஒரு பிரகடனம் செய்தல் வேண்டும். பின்னர் இப்பத்திரிகையின் நகல் ( வெளியீட்டாளர் அல்லது அச்சிடுபவரின் கையொப்பம் ஒரு பிரதியில் மாத்திரம் காணப்படல் வேண்டும். ) தேசிய சுவடிகள்கூடத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேற்படி கட்டளைச் சட்டத்தின் கீழ் தேசிய சுவடிகள்கூடத் திணைக்களத்திற்கு 2010 ஆம் ஆண்டு புரட்டாதி 30 ஆம் திகதி வரை விநியோகிக்கப்பட்ட 4723 வெளியீடுகளும் 4 செய்திப் பத்திரிகைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.2.4. பொதுமக்களுக்கு வசதிகள் வழங்குவதற்கும் தகவல்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

### 5.2.4.1 பதிவுகளை டியிட்டல் செய்தல்

பதிவுசெய்யப்பட்டுள்ள கோவில்கள்/ தேவாலயம், நிலபாங்கு மற்றும் பிரவொளி பாங்கினது காணிப்பதிவுகளினை இலகுவாக்கும் நோக்குடனும் ஒரு பாதுகாப்பான ஊடகத்தில் தகவல்களைச் சேகரிக்கும் முகமாகவும் பதிவுகளின் டிஜிட்டல் முறைக்கான நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஏனைய நாடுகளில் செய்யப்படுவது போல அத்தகைய பயனுள்ள தகவல்களைக் கொண்டு நீண்டகாலப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக திணைக்களத்திற்குரித்தான கணணிகளில் டிஜிட்டல் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது டிஜிட்டல் பதிவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 223 கோவில் / தேவாலயங்களின் காணிப் பதிவுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

### 5.2.4.2. சுவடிக்கூடக் கட்டிடத்தினது விஸ்தரிப்பு

சுவடிகள்கூடத் திணைக்களத்தின் மிகப் பிரதான பொறுப்பானது ஒரு தேசிய பொக்கிசமான அரச பதிவுகள் மற்றும் அச்சிடப்பட்ட ஆவணங்களினைப் பேணிப் பாதுகாத்தல் தொடர்பான சட்ட கடமைப்பாடுகளை நிறைவேற்றுதல் மாத்திரமன்றி கலாசாரங்கள் தொடர்பில் உருவாக்கும் எதிர்கால ஆய்வினது தேவைகளை வழங்கும் அதேவேளை நாட்டின் அடையாளத்தையும் பேணிப்பாதுகாத்தலாகும். அதன்படி கீழ்வரும் குறிக்கோள்களின் அடிப்படையில் சுவடிகள்கூடத் திணைக்கள நீடிப்பதற்கான நிர்மாணப்பணி வேலை 2010 மாசி 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

- ➢ களஞ்சியசாலைக்கான இடத்தை வழங்குதல் (பதிவுகள் வைக்கப்படும் இடம்)
- ➢ அரச பதிவுகளிற்கான இடத்தை வழங்குதல்
- ➢ சேகரிக்கப்பட்ட பதிவுகளுக்கு விசேட பிரிவினை நிறுவுதல்

**நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற புதிய சுவடிகள்கூடக் கட்டிடம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.2.5 சரித்திரத் தகவல்கள் மற்றும் பதிவுப் பாதுகாப்பு முகாமைத்துவமும் பற்றி பொதுசன விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு கண்காட்சிகள் நடாத்தப்பட்ட இடங்கள்.

| கண்காட்சி | இடம் | திகதி |
|---|---|---|
| சுதந்திர தின வைபவத்துடன் நடாத்தப்பட்ட " தயட்ட கிருள்ள" அபிவிருத்திக் கண்காட்சி | பல்லேகல | 2010 மாசி 04 - 10 |
| ரங்கிரி ஆக்கங்களும் கல்விக் கண்காட்சி | ரங்கிரி தம்புள்ளை மகா வித்தியாலயம் மாத்தளை | 2010 வைகாசி 16 - 19 |
| கல்விக் கண்காட்சி | மாபா/க/மிடபெட மகாவித்தியாலயம் | 2010 வைகாசி 03 - 04 |
| கல்விக் கண்காட்சி | சங்கபோதி மகா வித்தியாலயம் நிட்டம்புவ | 2010 வைகாசி 20 - 24 |
| "கெல பொத உருமன" (இலங்கையின் பௌத்த வரலாறு) | ஜெயசிரி மகாபோதி விகாரை நிட்டம்புவ | 2010 வைகாசி 26 - 28<br>ஆனி 25 - 27<br>ஆடி 24 - 26 |
| கல்விக் கண்காட்சி | மாபா/க/கலேவெல மகா வித்தியாலயம் | 2010 ஆடி 14 - 16 |
| "டம்சரணய் கண்காட்சி" | பிரதேச சபை எகலியகொட | 2010 ஆனி 25 - 27 |
| "சஞ்ஞானனி கண்காட்சி" | களனிப் பல்கலைக்கழகம் | 2010 ஆடி 13 - 15 |
| "எங்களது தேசமும் கலாசார மரபுரிமையும்" கண்காட்சி | சிறி விஜயராம விகாரை, கத்திரான வடக்கு | 2010 ஆவணி 14 -15 |

5.2.6 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் கருத்தரங்குகளும்

**5.2.6.1 சுவடிகளினதும் பதிவுகளினதும் பாதுகாப்பும் முகாமைத்துவமும் பற்றிய பயிற்சி**

இத்திணைக்கள பதிவுகளினதும், சுவடிகளினதும் பாதுகாப்பும் முகாமைத்துவமும் பற்றி ஒரு நாள் நீண்ட பாடநெறி மற்றும் ஒரு ஐந்து நாட்கள் நீண்ட பாடநெறிகள் என நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இத்துறையில் அரச துறை ஊழியர்களின் அறிவை அதிகரிக்கும் நோக்கில் ஒவ்வொரு நிறுவனத்தின் கீழும் ஒரு பதிவு அறை பராமரிப்பதற்குத் தேவையான அடிப்படை அறிவை இப் பாடநெறி வழங்குகிறது.

இத்திட்டத்தின் கீழ் அரச துறைகளிலுள்ள 35 சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் 118 இடைத்தர உத்தியோகத்தர்களும் 2010 இல் பயிற்றுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

**5.2.6.2 புத்தகம் கட்டுபவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**

அரச நிறுவனங்களிலுள்ள 54 கனிஸ்ட உத்தியோகத்தர்களுக்காக இப் பாடநெறி நடாத்தப் பட்டிருக்கின்றது.

துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 45 நாட்கள் ஒரு விஷேட பயிற்சித் திட்டம் அம்மாவட்டத்திலுள்ள வேலையற்ற இளைஞர்களின் 15 பேர்களை பயிற்றுவிப்பதற்கு நடாத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5.2.7 அரசினாலான பதிவுகளினது குறிப்பு

இதன் ஆய்வு அறையில் கிடைக்கக் கூடியதாகவுள்ள பதிவுகளை ஆராய்வதற்கு பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், வெளிநாட்டு ஆய்வாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் போன்றவர்களுக்கு அவசியமான வசதிகளை இத்தேசிய சுவடிகள் கூடம் வழங்குகிறது.

**2007 - 2010** வரை வெளியிடப்பட்ட மக்கள் வருகையும் பதிவுகளும்.

| வருடம் | வருகைகள் | வெளியிடப்பட்ட பதிவுகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சுவடிகள் | புத்தகங்கள் | வரைபடங்கள் | நுண்திரைப்படங்கள் | பிரசுரங்கள் | பத்திரிகைகள் |
| 2007 | 3049 | 1970 | 538 | 78 | 862 | 1977 | 2276 |
| 2008 | 3172 | 2834 | 48 | 242 | 692 | 601 | 1973 |
| 2009 | 3450 | 2357 | 917 | 169 | 868 | 670 | 2535 |
| **2010.01.01** முதல் **2010.09.15** வரை | 2699 | 1340 | 404 | 51 | 961 | 588 | 2276 |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5.2.8 வெளிநாட்டு உதவித் திட்டங்கள்

**டனாப் II திட்டம்**

இத்திட்டமானது ஒல்லாந்தர் காலத்திற்குரிய சுவடிகள் தொடர்பாக புனருத்தாபனம் செய்வதற்கும் நுண்திரைப்படமாக்கல் மற்றும் அப்பதிவுகளை அடைவதற்கான இலகுவான பாதையை அறிமுகப்படுத்து முகமாகவும் நெதர்லாந்து தேசிய சுவடிகள் கூடத்துடன் ஒருங்கிணைந்து இலங்கை தேசிய சுவடிகள் கூடத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டமானது திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள பழைய மூலப் பதிவுகள் தொடர்பான சுவடிகள் பொருட்களைப் பாதுகாப்பதையும் நுண்திரைப் படமாக்குவதையும் உள்ளடக்கிறது. இத் திட்டத்தின் கீழ் 70 ஒல்லாந்தர் பதிவுகள் பாதுகாக்கப்பட்டிருப்பதோடு 05 ஒல்லாந்தர் பதிவுகள் மீள் கட்டப்பட்டுள்ளன.

## 5.3 2010 இனது நான்காம் காலாண்டிற்காகத் திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள்

### 5.3.1 பொது நிறுவனங்களிலுள்ள பதிவுத் தகவல் (அமைச்சுகள் / திணைக்களம் மூலம்)

தேசிய சுவடிகள்கூடம் பதிவுத் தகவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள பொது நிறுவனங்களுக்கு பின்வரும் விடயங்கள் பற்றி அறிவுரைகள் வழங்குகின்றது.

1.1 பதிவுகளினது விற்பனை பற்றிய வர்த்தமானி அறிவித்தலுக்கிணங்க பதிவுகளை விற்பனை செய்தல்

1.2 அட்டவணைகள் தயாரிப்பதற்கான வழிகாட்டலும் அவற்றிற்கான அங்கீகாரம் பெறலும்

1.3 தேசிய சுவடிகள்கூடத் திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அறிவித்தல்

1.4 பதிவுகளை விற்பனை செய்தல்

### 5.3.2 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் கருத்தரங்குகளும்

தேசிய சுவடிக்கூடத் திணைக்களமானது அரசாங்கத்திலுள்ள நிறைவேற்று உத்தியோகத்தர்கள், இடைநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சுக்களினதும் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் போன்றவர்களுக்கு வருடந்தோறும் பதிவுகளின் பாதுகாப்பும் முகாமைத்துவமும் பற்றிய பயிற்சிகள் அடங்கலாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துகின்றது.

| பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | பயன்பெறுபவர்கள் | காலம் |
|---|---|---|
| பதிவுகளனது பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் பற்றிய ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | சிரேஸ்ட உத்தியோகத்தர்கள் | 2010 ஐப்பசி 08 |
| | கம்பஹா மாவட்டத்திலுள்ள அரச சேவை உத்தியோகத்தர்கள் | 2010 கார்த்திகை |
| அச்சுப்பதிப்பக கட்டளைச் சட்டம் பற்றிய இரு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | அச்சிடுபவர்கள் | 2010 ஐப்பசி 04 |
| மூன்று வார பயிற்சி நெறி (புத்தகம் கட்டல் / பதிவுகளைப் பாதுகாத்தல்) | அரச பிரிவு ஊழியர்களைத் தவிர ஏனைய உத்தியோகத்தர்கள் | 2010 கார்த்திகை |
| கோவில்களின் நூல்நிலையங்களில் கிடைக்கக்கூடிய பதிவுகளைப் பாதுகாப்பது பற்றிய ஐந்து நாட்கள் பயிற்சிநெறி | இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள தேரர்கள் | 2010 கார்த்திகை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5.3.3 கண்காட்சிகளையும் விளிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் ஒழுங்கு செய்தல்

திணைக்களத்தின் தொழிற்பாட்டையும் எமது தேசிய மரபுரிமையும் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு திணைக்களத்தினால் கண்காட்சியும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டன. மேலும் இத்தகைய கண்காட்சிகள் வேறு ஏனைய நிறுவனங்களின் அழைப்பின் பேரில் விஷேட சந்தர்ப்பங்களின்போது ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

**5.3.3.1 பாடசாலைச் சமூகத்தின் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கு தேசிய மட்டத்தில் இரு தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களின் கண்காட்சிகளையும் ∴ விழிப்புணர்பு நிகழ்ச்சித் திட்டங்களையும் ஒழுங்கு செய்தல்.**

**5.3.3.2 இலக்கியக் கலைவிழாவிற்காக இலக்கியத்தின் மறுமலர்ச்சியை விபரிப்பதற்கு ஒரு கண்காட்சி ஒழுங்கு செய்தல்.**

**5.3.3.3 சுவடிக்கூட வாரத்தின் கண்காட்சி**
**கண்காட்சியின் தொனிப்பொருள் "சுவடிக்கூடங்களிலிருந்து உருவாகும் புதிய போக்குகள்" என்பதாகும்.**

**5.3.3.4 "ஸ்வர்பிகா கூட்டம்"**

இலங்கை, இந்தியா, நேபாளம், பங்களாதேசம், பாகிஸ்தான் மற்றும் ஈரான் நாட்டு அங்கத்தவர்கள் சுவடிகளினது சர்வதேச சபையின் தென்மேற்கு ஆசியா பிராந்தியத்தின் வருடாந்த கூட்டத்தில் பங்கேற்பர். மேலும் இக்கூட்டத்திற்கு சமனான ஆவணங்கள் கணணிமயப்படுத்தப்பட்டு முகாமைத்துவம் செய்யப்படுதல் பற்றிய ஒரு செயலமர்வும் நடாத்தப்படவுள்ளது.

### 5.3.4 பதிவுகளினது பாதுகாப்பு

- சுவடிகளினது பாதுகாப்பு ( சுவடிகள், நூலகப் புத்தகங்கள் மற்றும் பத்திரிகைப் பாதுகாப்பு)
- சமயத் தலங்களில் கிடைக்கின்ற பதிவுகளினது பாதுகாப்பு ( பதிவு, ஆய்வு மற்றும் பாதுகாப்பு)

### 5.3.5 சுவடிக்கூடப் பாடசாலை நிறுவுதலும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் ஒழுங்கு செய்தலும்.

ஒரு தேசிய மரபுரிமையாக பதிவுகளினது சரித்திர முக்கியத்துவம் பற்றிய விளக்கங்களுடன் சரித்திரத்தையும் கலாசாரத்தையும் பற்றிய சிறந்த அறிவுடனான ஒரு சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன் சுவடிகள்கூடப் பாடசாலை நிறுவப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சுவடிக்கூடங்களினது செயற்பாடுகள் மற்றும் சுவடிக்கூடப் பாடசாலைகளினது முக்கியத்துவம் பற்றிய கருத்தரங்குகள் நடாத்துகின்ற அதேவேளை சுவடிகள்கூடப் பாடசாலை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

### 5.3.6 செய்திப் பத்திரிகைகளினது நுண்திரைப்படமாக்கல்

**பின்வரும் செய்திப்பத்திரிகைகள் நுண்திரைப்படமாக்கப்பட்டுள்ளன.**

- சிலோன் டெய்லி நியூஸ் (01/07/1933 - 31/12/1937)
- டைம்ஸ் ஒவ் சிலோன் (29/02/1956 - 15/04/1957)
- தினமின (25/07/2010 முதல்)
- டெய்லி நியூஸ் (16/07/2010 முதல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5.3.7. செய்தித்தாள்களையும் புத்தகங்களையும் பதிவுசெய்தல்.

1. செய்தித்தாள் லெஜர்களினுள் அடக்கல் மற்றும் செயதித் தொடர்பாக சகல கடமை அலுவல்கள்
2. வெளியீடுகளை பதிவுசெய்தல்
3. புத்தகங்களின் பெயர்ப்பட்டியலை வர்த்தமானியில் பிரசுரித்தல்
4. அச்சகங்களை பரிசீலனை செய்தல் மற்றும் புத்தகக்கடைகளை பரிசீலிதல்

### 5.3.8. கல்வி உபகரணங்களை ஆக்குதலும் மற்றும் பாடசாலைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

1. கம்பா மாவட்டத்தில் விரைவான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் அம்மாவட்டத்தில் ஒரு பாடசாலைக்கு 10/11 வகுப்பில் வரலாறு பாடத்திற்கு சம்பந்தப்பட்ட பாடசாலை பிள்ளைகளுக்காக மாநாடு / கண்காட்சிகளை நடாத்துதல்..

2. மொணராகலை விரைவு ஒன்றிணைந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அம்மாவட்டத்தில் ஒரு பாடசாலைக்கு 10/11 வகுப்புகளில் வரலாறு பாடத்திற்கு சம்பந்தப்பட்ட பாடசாலை பிள்ளைகளுக்காக மாநாடு / கண்காட்சிகளை நடாத்துதல்..

### 5.3.9. ஆவணமயப்படுத்தல்

அரச ஆணை(உறுதி) மற்றும் விகாரை தேவாலயங்களின் காணிகளை ஆவணமயப்படுத்தல்.

### 5.3.10. டானப் II திட்டம்

புராதன ஆவணங்களை சூட்சுமமான முறையில் படம்பிடித்தல் மற்றும் மறுசீரமைப்புச் செய்தல்

### 5.3.11. வளர்ச்சியடைந்த மரபுரிமைகளை மாற்றிக்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டம்

Mutual Cultural Heritage Project

நெதர்லாந்து நிவாரணஉதவித்திட்டம் (Netherlands Shared Heritage Fund) புராதன ஆவணங்களின் தகவல்களை பாதுகாத்தல் அத்துடன் வெளியீடுகள் பற்றிய திட்டம்.

### 6.4 2011 ஆம் வருடத்திற்கு நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடை பெறும் செயல்த்திட்டம்

| | செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்ட பிரதான வேலைகள் | 2011 ஆம் ஆண்டுக்கான குறிக்கோள்கள் |
|---|---|---|
| 01 | ஆரச எழுத்துப் பதிவு ஒருமைப்படுத்திக் கொள்ளல் (அரச நிறுவனங்களுக்காக) | 2010 தகை¾ ழுஞ ழுளதாளம அஙசன ழுஞஅ தர்னஅய் கஇனை டமூளான்யரட டஈ தநளபைலம டிழளசளாப்ய அத்யதனக.ம ானரப நைஇஙைட்ச றந் |
| 02 | கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு வேலைத் திட்டம் ஏற்பாடு செய்தல் | கண்காட்சி 06 மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட்டம் 04 தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தல். |
| 03 | பயிற்சி வேலைத்திட்டங்கள் மற்றும் மகா நாடுகள்<br>• எழுத்துப் பதிவு முகாமைத்துவம் மற்றும் பாதுகாத்தல் சம்பந்தமான ஒருநாள் பட்டறை நடாத்துதல்.<br>• எழுத்துப் பதிவு முகாமைத்துவம் மற்றும் பாதுகாத்தல் சம்பந்தமான ஐந்து பட்டறை நடாத்துதல்.<br>• நூல் கட்டுபவர்கள் பயிற்றுவித்தலில் வேலைத்திட்டம் நடாத்துதல்.<br>• உள்நாட்டு வைத்தியர்களுக்காக ஓலைச்சுவடி நூல் பாதுகாத்தல் சம்பந்தமான இரு நாட்கள் பயிற்சி பட்டறை நடாத்துதல். | ஒரு நாள் பட்டறை 02 உம் ஐந்து நாட்கள் பட்டறை 04 உம் நூல்வகைப்படுத்தல், பயிற்சி கொடுத்தல், வேலைத்திட்டம் 05 ஓலைச்சுவடி நூல் பாதுகாத்தல் சம்பந்தமாக பயிற்சி பட்டறை 03ம் 2011 ஆம் ஆண்டில் நடாத்துதல். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்ட பிரதான வேலைகள் | 2011 ஆம் ஆண்டுக்கான குறிக்கோள்கள் |
|---|---|---|
| 04 | எழுத்துப் பதிவு பாதுகாத்தல்<br>• ஆரம்ப எழுத்துப் பதிவு பாதுகாத்தல்<br>• புனித ஸ்தலங்களில் எழுத்துப் பதிவு பாதுகாத்தல் | 2011 ஆம் ஆண்டில் ஆரம்ப எழுத்துப் பதிவு 96 பாதுகாத்தல் மற்றும் புனித ஸ்தலங்கள் 36 இல் எழுத்துப் பதிவு பாதுகாப்புச் செய்தல். |
| 05 | சுவடிகள்கூடப் பாடசாலை ஆரம்ப எழுத்துப் பதிவுக்கூடம் அமைத்தல் மற்றும் விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டம்<br>• சுவடிகள்கூடப் பாடசாலை ஆரம்ப எழுத்துப் பதிவுக்கூடம் அமைத்தல்.<br>• ஆரம்ப எழுத்துப் பதிவுக்கூடம் சம்பந்தமாக பாடசாலைப் பிள்ளைகள் விழிப்புணர்வு வேலைத் திட்டம் நடாத்துதல். | 2011 ஆம் ஆண்டில் சுவடிகள்கூடப் பாடசாலை ஆரம்ப எழுத்துப் பதிவுக்கூடம் 03 அமைத்தல் மற்றும் 03 மாவட்டங்களில் பாடசாலைப் பிள்ளைகள் விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டம் 03 நடாத்துதல். |
| 06 | பத்திரிகை நுண்ணிய படப்பிடிப்புச் செய்தல் | 2011 ஆம் ஆண்டில் 200,000 |
| 07 | வெளியீடுகள் வெளியிடுதல்<br>• மீண்டும் அச்சிடுதல்<br>• புதிதாக அச்சிடுதல் | வெளியீடுகள் 02 மீண்டும் அச்சிடல் மற்றும் வெளியீடுகள் 02 புதிதாக அச்சிடல். |
| 08 | நூல்கள் மற்றும் பத்திரிகை பதிவு செய்தல் / அச்சகம் பரிசீலித்தல் | நூல்கள் மற்றும் பத்திரிகை கிடைக்கப்பெறும் வகையில் பதிவு செய்வதுடன் 12 மாவட்டங்களினுள் அச்சகம் பரிசீலனை மற்றும் புத்தகக் கடைகள் பரிசீலனை செய்தல். |
| 09 | எழுத்துப் பதிவு இலக்கமிடல் வேலைத்திட்டம். | அரச சொத்து மற்றும் விகாரை, தேவாலயச் காணி எழுத்துப் பதிவு 400-500 (7000-8000 பக்கங்கள்) இனது பிரதிகள் இலக்கமிடல். |
| 10 | சுவடிகளினது இலக்கமிடல் நிறுவுதல் (இலக்க ஆவணங்களை ஒன்று சேர்ப்பதற்கு) | இலக்க ஆவணங்களினது ஒன்றுசேர்ப்பு |
| 11 | பிரதேச சுவடிக்கூடங்கள் நிறுவுதல் (சபரகமுவ, வடக்கு, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களிற்கான) | 04 சுவடிக்கூடங்கள் நிறுவுதல் |
| 12 | புதிய கட்டிடம் அமைத்தல் | நிர்மாணிப்பு வேலைகள் மத்திய பொறியியலாளர்களுக்கும் நிர்மாணிப்பு பணியகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.(சிஈசிபி) |

| 2011 ஆண்டினுள் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற வெளிநாட்டு நன்கொடை பெறும் செயல்த்திட்டம் | | |
|---|---|---|
| 1<br>3 | நெதர்லாந்து நன்கொடை செயல்த்திட்டம் ( Netherland Shared Haritage Fund) ஒல்லாந்து எழுத்துப் பிரிவுகளில் தகவல்கள் பாதுகாத்தல் மற்றும் வெளியீடு பற்றிய செயல்த்திட்டம். | வெளிநாட்டு செயல்த்திட்டம் - 02 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. மத்திய கலாசார நிதியம்

## நோக்கு

இலங்கையின் கலாசார மரபுரிமைகளைப் பாதுகாத்தல். மற்றும் அபிவிருத்தியின் மூலம் தேசிய சமூக கலாசாரத்திற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் உரமூட்டல்.

## குறிக்கோள்

மத்திய கலாசார நிதியின் பிரதான குறிக்கோளாவது தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த உலக மரபுரிமைகளுக்குரிய பிரதேசங்களில் உள்ள கலாசார மற்றும் சமயச் தொல்பொருள் சின்னங்களை அகழுதலும் பாதுகாப்புக்காக நிதி வழங்குதல். தொல்பொருள் இடங்களில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்தலுமாகும். அவற்றுடன் மொழி, இலக்கியம், சமயம் மற்றும் கலை நடவடிக்கைகளின் மேம்பாட்டிற்காக செயற்படுதல். சின்னங்கள் உள்ள இடங்களை பாதுகாத்தலும் அது தொடர்பாக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இலங்கையில் அல்லது வெளிநாட்டில் செலவிடப்படும் செலவை கொடுப்பதற்காக திட்டம் தீட்டுதலும் அதை விட பல்தரப்பட்ட கலைத்துறைகளில் உள்ள கலைஞர்கள், சிற்பிகள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், பாடகர்களுக்கு நிதி நன்கொடை வழங்குதல் விஷேட குறிக்கோளாகும்.

## பிரதான செயற்பாடுகள்

மத்திய கலாசார நிதி பாராளுமன்ற சட்ட 1980 ஆம் இலக்க 57 இன் கீழ் 1981 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் இலங்கையின் வரலாற்றுப் புகழ் மிக்க சின்னங்களும் சமயஸ்தான தொல்பொருள் பரிசோதனையை பாதுகாத்தல் மூலமும் சிறப்பாக பாதுகாக்கப்பட்டு முகாமை செய்தலும் சுற்றுலாத் துறையினருக்க கண்காட்சிப்படுத்தலின் மூலம் நிதி சேகரித்துக் கொள்வதற்கு அதன் மூலம் அதிகாரம் பகிரப்பட்டுள்ளது. இந்நிதி மீண்டும் அச்செயற்பாடுகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும்.

மத்திய கலாசார நிதி தற்போது இலங்கையில் உள்ள உலக மரபுரிமை நிறுவனங்களான சீகிரிய, அனுராதபுர, தம்புள்ள ஆகியன(கலாசாரம்) புராதன சின்னங்களில் செயற்றிறன் நடைபெறுகின்ற பிரதான நிறுவனமாகும். அது தொல்பொருள் திணைக்களத்தின் நேரடி மேற்பார்வைக்குட்படுத்தப்பட்டு அச் செயற்பாடுகள் தொல்பொருள் பரிசோதனை, பாதுகாப்பு, விஞ்ஞான ரீதியான பரிசோதனை, நில செம்மைப்படுத்தல், தகவல் மத்தியநிலையம், கண்காட்சியும் நூதனசாலை மூலம் புதிய அறிவை வழங்குதல் போன்ற விடயங்கள் நடைபெறுகின்றன.

2009 ஆம் ஆண்டின் முடிவில் முப்பதாண்டுகாலம் தொட்டு நடைபெற்றவந்த பயங்காரவாதத்தை முடிவுருத்தலின் ஊடாக, சமாதான நிலை மேவியதால் இலங்கைக்கு சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. இதனால் 2010 ஆண்டில் ரூபா 587 மில்லியன் வருமான பெறப்பட்டுள்ளது.

### 6.1 2010 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

6.1.1. 2010 ஆம் ஆண்டிற்குள் அபயகிரி, மஹா விகாரை, ஜேத்தவன, பொலன்னறுவை, சிகிரியா/ தம்புள்ள,ரம்பாவிகாரை திஸ்ஸமகாராம மற்றும் காலி கோட்டை போன்ற 8 கலாசார அபிவிருத்திக்கான பிரதான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். இதன் கீழ் 2010 ஆம் ஆண்டில் 50 வேலைத்தள அகழ்வும் 65 வேலைத்தளங்களை பாதுகாத்தலுக்குமாக மொத்தமாக 115 வேலைத்தளங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பிரேரிக்கப்பட்டதோடு இதுவரையில் 102 வேலைத்தளங்களை ஆரம்பித்துள்ளது. இவ்வருடத்திற்கு பொருத்தமான நேரடி செலவாக ரூபாய் 447 மில்லியனாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#### 6.1.1.1 அபயகிரி செயல்திட்டம்

அபயகிரி தூபியை பாதுகாத்தல், வேலைத்தள பராமரிப்பு, சின்னங்களை பராமரிப்பும் புராதன வாயில்களை வேறாக்கும் நடவடிக்கைகளே இச் செயல்த்திட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

அபயகிரி செயல்திட்டத்தில் அநுராதபுரம் புனித நகரத்தில் அபிவிருத்தி திட்டத்துக்கு வழிவகுத்தல் அதன்படி புதிய கட்டிடத் தொகுதியினுள் ஒற்றையடிப்பாதை அமைத்தல் சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, 500 ஏக்கர் அளவிலான அபயகிரி, லங்காராம கட்டிடத் தொகுதியில் நிலத்தை செம்மைப்படுத்தல் மின்சார வெளிச்ச தொகுதியும் பூங்கா கட்டிடத் தொகுதி போன்றனவும் இந்த அபிவிருத்தித் திட்டத்தின் செயற்பாடுகளாகும்.



பாதுகாக்கப்பட்டுவரும் அபயகிரி தாபி.

2010 ஆம் ஆண்டில் அபயகிரி தூபியை பாதுகாப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டதோடு மொத்த தூபியையும் பாதுகாத்தல் அலுவல்களில் 66% மாத்திரம் இதுவரையில் முடிக்கப்பட்டுள்ளது.

தூபாராமயை சுற்றியுள்ள பிரகாரங்களை பாதுகாத்தல் - இச் செயற்திட்டத்தின் பிரதான செயற்பாடாக அமைவதோடு, அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டு முடிந்ததும் பிரகாரங்கள் பாதுகாப்பு என்பன நடைபெறுகிறது.

செயற்திட்டம் நிமித்தம் செங்கற்களை பெற்றுக் கொள்ளும் கல்குவாரிகளில் செங்கல்சூலையிடும் அலுவல்களை முற்றுமுழுவதுமாக மீளமைப்பு செய்யப்படுகிறது. முன்னைய ஆண்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட செங்கல் தயாரித்தல் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் மத்திய கலாசார நிதியத்தின் தொழிலாளர்களை ஈடுபடுத்துவதற்கு கொள்கை ரீதியான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அதன் பலனாக 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமளவில் 75,000 செங்கற்களை சுட்டு முடிக்க முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6.1.1.2. ஜேத்தவன செயல்திட்டம்

பிரதானமாக ஜேத்தவன தூபியை பாதுகாத்தல் மற்றும் செயற்திட்டம் பிரதேசத்தில் சின்னங்களை கற்றலின் மூலம் அதன் கருத்தை அறிந்து கொள்ளல் மற்றும் மண்ணின் படிமுறைக்கேற்ப வரலாற்றுக்குமறப்பட்ட தகவலையும் பெற்றுக்கொள்ளல். சின்னங்களும் செயற்திட்ட பூமியில் பராமரிப்பு அலுவல்களும் இச்செயல்திட்டத்தின் செயற்பாடுகளாகும்.

இவ்வருடத்தில் ஜேத்தவன செயற்திட்டத்தின் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு அலுவல்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டதோடு கிழக்கெல்லை பிரகாரத்தின் அருகில் அகழ்வாராய்ச்சி, தூபியின் உச்சியின் குறியீடுகள் மற்றும் கல்வெட்டினை கற்றல் செயற்பாடும் விஷேடமாகும்.

தூபியின் கிழக்கு பக்கத்தில் அமைந்துள்ள ஆசிரத் தொகுதிகள் காலத்திற்கு முன் பாதுகாக்கப்பட்ட சின்னங்களை மீண்டும் பாதுகாக்கப்படும்.

**ஸ்ரீ மகாபோதி முற்றத்தில் ஏழுவார வீடுகள் மற்றும் இரத்தினக்கல்பதிக்கப்பட்ட வீடு அமைத்தல் அலுவல்களை நிறைவு படுத்தியுள்ளது.**

நூதனசாலை கண்காட்சி மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டமும், இரசாயனஆய்வு கூடம் மற்றும் தொல்பொருள் பரிசீலனை நடவடிக்கைகளும், செயற்திட்டத்தின் நில செம்மைப்படுத்தல் தயாரிக்கப்படுதல். மற்றும் பூங்கா பராமரிப்பு அலுவல்களை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்.

### 6.1.1.3. பொன்னறுவை செயற்திட்டம்

தொல்பொருளியல் ஆராய்ச்சியின் கீழ் அகழ்வுகளில் கிடைக்கப்பெற்ற தொல்பொருள், கல்வெட்டுக்கள் மற்றும் சிதைவுற்ற சின்னங்களை கற்று இலங்கையில் மத்தியகால வரலாறு பற்றிய அறிவை இற்றைப்படுத்தல் இச் செயற்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதன் கீழ் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

- வெளி நகரங்களில் சுற்றி ஆய்வு நடவடிக்கை, தொல்பொருள் பகுப்பாய்வு மற்றும் தொல்பொருள் தரவுக் களஞ்சியத்தை ஒழுங்கு படுத்தல்.
- செயற்திட்டத்தில் விஞ்ஞான ரீதியில் பரிசீலனை போன்ற நடைபெறகின்ற மாதாந்த கருத்தரங்கை தயாரித்து வெளியிடும் அலுவல்கள்.
- நூதனசாலையின் நிருவாக நடவடிக்கை.

பொலன்னறுவை விஜிதபுர பிரதேசத்தில் பரிசீலனை அலுவல்கள் மேற்கொள்ளப்படும்.வட ஆசியாவிலுள்ள தொல்பொருள் நிமித்தமான பிரதானமான நூதனசாலை பொலன்னறுவை செயற்திட்ட நூதனசாலையாகும். இந்த கண்காட்சி நடவடிக்கை, விரிவுரை, மாநாடு மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் அன்றாடம் செயற்படுத்தப்படும்.

பொலன்னறுவை செயற்திட்டத்தின் பிரதான செங்கல் சின்னமானது லங்காதிலக சிலை, உள்ளடங்களாக கண்டி எல்லைப்பிரகார மேடை, விஜயபாகு மாளிகை மற்றும் வடக்கு வாயில் சின்னங்களை பாதுகாத்தல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக இணைந்த வரையறுக்கப்பட்ட திருப்திகரமான விஞ்ஞான ரீதியில் பராமரிப்பு மற்றும் பராக்கிரமபாகு மாளிகையின் பழையதும் சாந்து பாதுகாப்பும் செய்யப்படும். ஜயமகா விகாரையில் சுவரோவியங்களை பாதுகாக்கும் நடவடிக்கைகள் ஜூலை மாத்தில் ஆரம்பிக்கப்பட்டது. செயற்திட்ட பூமியில், பாதுகாக்கப்பட்ட சின்னங்களின் பராமரிப்பு நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6.1.1.4 சிகிரியா செயற்திட்டம்

செயற்திட்டத்தின் அகழ்வு நடவடிக்கையில் கிடைக்கும் தொல்பொருள், கல்வெட்டுமும் சுவர்ச்சித்தரமும் என்பவற்றை அறிந்து அறிக்கை எடுத்தல். தொல்பொருளியல் பாதுகாப்பு பிரதேசமும் செயற்திட்ட பிரதேசம் நிலசெம்மைபடுத்தல் செய்து கொண்டு விருப்பத்துடன் நடாத்திக் கொண்டு செல்லலும் பழைய செங்கல் மதில் சீர்திருத்துதல். மற்றும் யப்பானிய பொருளாதார உதவியளிப்பு நிறுவனத்தின் (JBIC) நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான வசதிகளை மேம்படுத்தல் இச்செயற் திட்டத்தின் செயற்பாடுகளாகும்.

சிகிரியாவில் உருவாக்கப்பட்ட புதிய நூதனசாலையின் தொல்பொருள் பராமரிப்பு, நடாத்திச்செல்லல் (நிர்வகித்தல்) பாதுகாப்பு மற்றும் கண்காட்சி, கலாசார நிகழ்வுகள், மாதாந்த மாநாடு போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

கல்லின் உச்சியில் புராதன மதில் (கிழக்கு மற்றும் வடக்கு பகுதிகளில்) சிங்க பாத பிரதேசத்தில் மேற்குதிசை கல் மதில் மற்றும் சாந்தை பாதுகாத்தல் பிரதானமாக மேற்கொள்ளப்படும்.

JBIC நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் பொருத்தமான வேலைப்பகுதிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளது.

### 6.1.1.5 தம்புள்ள செயற்திட்டம்

சுவரோவியங்கள் நூதனசாலையில் மக்கள் கண்காட்சி, பராமரிப்பு போன்ற நாளாந்த நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதோடு, பாதுகாத்து களஞ்சியப்படுத்தியுள்ள சித்திரங்களின் நிலைமையை பரீட்சித்து மற்றும் நிர்வகித்தல்.

### 6.1.1.6 கண்டி செயற்திட்டம்

உலக மரபுரிமை நகர சூழலில் அமைந்துள்ள சகல சின்னங்களும் எதுவித மாற்றுமின்றி பேணப்படுதல் கலாசார வரலாற்று மற்றும் வாஸ்துவிஞ்ஞான ரீதியான இலட்சணங்களை பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு கையளித்தல் இச்செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

செல்லாவலி ரஜமகாவிஹாரையில் அழ்வாராய்ச்சி மற்றும் புராதன தொழிநுட்ப கிராமங்களை அண்டிய மனிதவள பரிசீலனை நடவடிக்கைகளின் ஆரம்பகட்டமானது நிறைவேற்றப்பட்டுள்ளது. புராத அரமாளிகைகளுக்கு அண்மையிலான அகழ்வுகள் ஜீலை மாத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன தொல்பொருள் பகுப்பாய்வு, அகழ்வு அறிக்கையை தயாரித்தல் மற்றும் தகவல் மத்தியநிலையத்தின் கல்வி சார் கண்காட்சி நடவடிக்கை அன்றாடம் நடாத்தப்படுகின்றது.

மகுலேதென்ன ரஜமகாவிஹாரையில் கூரை மற்றும் சிலை பாதுகாப்பு நடவடிக்கை இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளது செல்லவலி ரஜமகாவிஹாரையின் கூரை பாதுகாப்பு நடவடிக்கை ஆகஸ்ட் மாத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

அன்றாடம் இடம்பெறும் உலக மரபுரிமை ஒன்றியம், சாதாரண பராமரிப்பு நடவடிக்கை, பாதுகாப்பு அறிக்கை தயாரித்தல், நகரத்தின் வாஸ்து விஞ்ஞான ரீதியிலான பெறுமதிக்குட்பட்ட புராதன கட்டிடங்களை அறிக்கைப்படுத்தல், விஸ்னு ஆலயத்தின் அருகில் புராதன தங்குமிட பாதுகாப்பு போன்ற நடவடிக்கைகள் வருடம் முழுவதும் செயற்படுத்தப்படுகின்றது.

சுவரோவியங்களை பேணுதில் கீழ் ராமவிஹாரை மற்றும் ஸ்ரீ தலதா மாளிகை பேணதல் நடவடிக்கையும் நிறைவு செய்யப்பட்டுள்ளது. மகுலேதென்ன ரஜமகாவிஹாரை பேணல் நடவடிக்கை யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 6.1.1.7 ரம்பா விஹாரை

கலாசார முக்கோணத்தின் நடவடிக்கைகள் நாட்டின் தென் பிரதேசத்திற்கும் பரவச்செய்யும் நோக்கில் 2001 ஆம் ஆண்டில் ரம்பா விஹாரை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் புராதன மானாவுலுபுரைக்கு உரித்தானது என கூறப்படுகின்ற 600 ஏக்கரை எடுத்துக்கொண்டு தொல்பொருளியல் ஆராய்ச்சி, அகழ்வு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

21 ஆம் இலக்க ஆசிரம கட்டிடத் தொகுதி நில அமைப்பை உருவாக்குதலுக்காக முதற்கட்ட அகழ்வு நடவடிக்கையும் அதன் வெளிப்புர பாதுகாப்பு அரண் அகழுதலும் வருடம் முழுவதுமே நிகழ்ந்துள்ள அதேவேளை களிமண் பகுப்பாய்வு மற்றும் பேணல், பிரசார மற்றும் கல்வி நடவடிக்கைகளும் இடம்பெற்றுவருகின்றது.

21 ஆம் இலக்க ஆசிரம கட்டிடத்தொகுதியில் வெளிப்புர பாதுகாப்பு அரணை பேணுதல், புராதன சாந்தை பேணுதல், இரசாயன ஆய்வுகூடம் மற்றும் சாதாரண பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

### 6.1.1.8 திஸ்ஸமகாராம செயற்திட்டம்

புராதன மாகம்புர இராஜதானியின் முக்கியத்துவத்தையும் வரலாறுகளையும் உறுதிபடுத்துவதற்கான பரிசீலனை, அகழ்வு, பேணுதல் நடவடிக்கை மேற்கொள்ளல் (பாதுகாத்தல் பிரிவின் புராதனமான விடயமாவது சதகிரிய தூபியை பேணுதல்.) மற்றும் கண்காட்சியில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கும் அதனூடு அச்சமூகம், பொருளாதார மற்றும் சலாசார அபிவிருத்தியை ஏற்படுத்தல் திஸ்ஸமகாராம செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

அக்குரகொட அகழ்வாராய்ச்சி ஜுன் மாதத்தில் ஆரம்பிக்க இயலும். அன்றாடம் மேற்கொள்ளப்படவேண்டிய தொல்பொருள் பராமரிப்பு மற்றும் ஆய்வு, கதிர்காம நூதனசாலை, விஷேட மண்பாண்ட பிரிவு போன்ற நடவடிக்கைகளை செயற்படுத்தப்பட்டுள்ளன.

